பக்கங்கள்: பன்னிரண்டு

*egistered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 28 | திங்கட்கிழமை | (10-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 143

## சமாதான முயற்சி பிசுபிசுக்கிறது

# புலிகளின் திட்ட வரைபில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது

## ஜே.வி.பி. அறிவிப்பு

(நமது நிருபர்)

**இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்விற்கு அரசாங்கத்துடன் பேசுகின்ற மற்றத் தரப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இருக்க வேண்டுமென்பதை ஜே.வி.பி ஏற்றுக் கொள்வதாக அக்கட்சியின் அரசியல் பிரிவு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. எனினும் புலிகளின் திட்டவரைபில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாதெனவும் அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி விடுதலைப் புலிகளுடன் நடத்தப் போகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான கூட்டுக் கட்சியான ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

தமிழீழ விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டுள்ள தன்னாட்சி அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை அடிபடையாக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் நோக்கம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கில்லை. இனப்பிரச்சினைத் தீர்வில் அரசாங்கத்துடன் பேசுகின்ற மறுதரப்பாக விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கும் அதே

(12ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞர்,ஸ்ராலின், வை.கோ. நேற்று பொலிஸாரால் கைது

(சென்னை)

சென்னை மெரினாக் கடற்கரையில் நேற்று இடம் பெற்ற பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட களேபரத்தை அடுத்து, தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, அவரது மகன் மு.க.ஸ்ராலின் மற்றும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி ஆகியோர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியப் பொதுத் தேர்தலையொட்டி நேற்று தமிழ் நாட்டில் கலைஞர் கருணாநிதியின் ஏற்பாட்டில், அவரது கூட்டணிக் கட்சியான இந்திரா காங்கிரஸின் மாபெரும் பொதுக் கூட்டம் இடம் பெற்றது.

தமிழ் நாட்டில் இன்று இடம் பெறுகின்ற தேர்தலுக்கான இறுதிப் பிரசாரக் கூட்டமாக மெரினாக் கடற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை படை அதிகாரிகளுடன் புலிகளின் பிரதிநிதிகள் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டப் பொலிஸ், இராணுவ அதிகாரிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பு ஒன்று நேற்று நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் புலிகள் என்பதில் முரண்பாடில்லை

## ரவூப் ஹக்கீம் பி.பி.ஸிக்குப் பேட்டி

(லண்டன்)



விடுதலைப் புலிகளைத் தமிழர்களின, ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்வதில் முஸ்லிம் காங்கிரஸிற்கு எவ்விதமான முரண்பாடுகளும் இல்லையென அதன் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

லண்டன் பி.பி.ஸிக்கு நேற்று இரவு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். முஸ்லிம்கள் தனியான தரப்பாக அங்கீகரிக்க வேண்டுமென்ற எங்களின் கோரிக்கை வலுப்பெற்று அதற்கான அங்கீகாரமும் முன்னைய அரசினால் வழங்கப்பட்டது. அத்துடன் முன்னைய அரசுடன் இணைந்து ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் செய்ததாக ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். முஸ்லிம் தரப்பினர் ஆளும் கட்சியிலும் எதிர்க் கட்சியிலும் இருக்கிறார்கள் என்பதற்காக முஸ்லிம்களுககுப் பேச்சுவார்த்தையில் இடம் தருவது குறித்துத் தீர்மானிக்கப் படுவதில்லை.

வடக்குக் கிழக்கில் வாழும் முஸலிம்களில் அதிக பட்ச ஆணையைப் பெற்றுள்ள முஸ்லிம் காங்கிரஸின் தலைமையைப் பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் கடப்பாடு அரசுக்குள்ளதென ஹக்கீம் தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் காங்கி

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நடந்த விபத்தில் சுண்டுக்குளி ஆசிரியை மரணம்

(கொழும்பு)



கொழும்பு கட்டுநாயக்கா வீதியில் நேற்று இடம்பெற்ற கோரவிபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் ஸ்தலத்தில் பரிதாபகரமாக மரண்மாகியுள்ளனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் கட்டுநாயக்கா வீதியில் கந்தான என்னும் இடத்தில் ஹயஸ் வானும் தனியார் பஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளானதினாலேயே இத்துயரச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இச் சம்பவத்தில் ஹயஸ் வானில் பயணம் செய்த திருநெல்வேலியைச் சேர்ந்த யாழ்ப்பாணம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் குற்றச்சாட்டை மறுக்கிறது இராணுவம்

(கொழும்பு)

மட்டக்களப்புச் சம்பவம் தொடர்பாக, இலங்கை இராணுவத்தினர் மீது வடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமேத பெரேரா மறுத்துள்ளார்.

அண்மைக்காலத்தில் மட்டக்களபபில் தொடரும் விடுதலைப் புலிகள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் இராணுவத்தினர் இருப்பதுடன், சமாதானத்தை பாதிக்கச் செய்யும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபடுவதையும் சுட்டிக்காட்டிய புலிகள், தமது கடுமையான கண்டனததை

(12ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவப் புலனாய்வு அதிகாரி மட்டக்களப்பில் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாண்டவன் வெளி பிரதான வீதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சுட்டுச் சம்பவத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் பற்படி கம்பனி முகாம் புலனாய்வு அதிகாரியான வசந்த கொலம்பகே (வயது26) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் அண்மையில் விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்தாகவும் நேற்று மீண்டும் பணிக்குத் திருபுவதற்காக மட்டக்களப்பு நோக்கி பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த போது இவருடன் பயணம் செய்ய ஒரு நபர் இவரைச் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது.

இவரது சடலம் மரண விசாரணைக்காக மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சூட்டுச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் தற்போது மேற்கொண்டு வருவதாகவும் மட்டக்களப்புப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

(ச-61-10)

## நோர்வே அமைச்சர் பீற்றர்சன் இன்று இலங்கை வருகிறார்

### நாளை வன்னியில் தலைவர் பிரபாவுடன் சந்திப்பு

(கொழும்பு)



இலங்கையின் சமாதான முயற்சிகளுக்குப் புத்துயிர் அளிக்கும் முகமாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் இன்று இலங்கை வருகிறார்.

இலங்கை வரும் அமைச்சர் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் மகிந்த ராஜபக்ஸ, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியுறு ஹெவ்டே மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கா ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுநடத்தவுள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கான ஒழுங்குபடுத்தல கால அட்டவணை

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு இளைஞன் திருமலையில் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் திருகோணமலை தம்பலகாமத்தில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லபட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினமிரவு நடைபெற்றது. மட்டக்களப்பு கிரான் பாடசாலை வீதியைச் சேர்ந்த செல்வராசா குணசீலன் (வயது 28) என்ற நபரே சுட்டுக் கொல்லபட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டையை வைத்து இவரது சடலம் இனங் காணப்பட்டதாக பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதேவேளை, இறந்தவரின் சட்டைப் பைக்குள் ஒரு கடிதம் காணப் பட்டதாகவும், அக் கடிதத்திதன் மூலம் இவர் கருணா குழு

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேசுவதற்கு தமிழ்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை

## ஐ.ம.சு.மு. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் பிரதான இருதரப்பாக அரசும் -விடுதலைப் புலிகளுமே கலந்துகொள்ளுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் சார்பில் அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, "அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு சகல தமிழ்க் கட்சிகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

எனவே, சமாதானப் பேச்சுவார்த்தையில் தமிழீழ விடுதலைப்புலிகள் முக்கிய தரப்பாக கலந்து கொள்வர்.

அத்துடன், கடந்த இரண்டு வருடங்களாக இடம்பெற்ற பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்ட பிரச்சினைகளைக் கவனத்தில் கொண்டே அரசு விடுதலைப் புலிகளுடன் பேசவுள்ளது.

மேலும் சகல மக்களினதும் அபிலாஷைகளையும், ஜனநாயக உரிமைகளையும் பேணக்கூடிய வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-61,10)

## குளிரூட்டல் வசதிகள் இன்றி வடமராட்சி மீனவர் பாதிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் பிடிக்கப்படும் கடலுணவுகளைக் குளிரூட்டி வைப்பதற்கான வசதிகள் இன்மையால் இப்பகுதி கடற்றொழிலாளர்கள பெரும்பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் இயங்கிய ஐஸ் கட்டித் தொழிற்சாலைகளும் படையினரின் பாதுகாப்பு வலய நடைமுறையால் முடக்கி வைக்கப்பட்டுள்ளதாலேயே இந்நெருக்கடி நிலை தோன்றியுள்ளது.

இதனால் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் வருமான இழப்புக்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை, வடமராட்சி, தீவகம், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கான கடற்றொழிலார் சங்க சமாசங்களிற்கு உலக உணவு ஸ்தாபனம் 18 மில்லியன் ரூபா பெறுமதியான குளிரூட்டல் இயந்திரங்களை வழங்கியுள்ளது. ஆனால், கடந்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடமராட்சி கிழக்கு மீனவர்களின் நன்மை கருதி குளிரூட்டல் இயந்திரம் வழங்கப்படாமையால் இப்பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

(ந-43)

## மணல் ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் தீக்கிரை

(பருத்தித்துறை)

சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச் சென்ற உழவு இயந்திரமொன்று இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் நேற்றைய தினம் அதிகாலை புலோலி புற்றளை மாவில் வயலுக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

வல்லிபுரம் பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்று கொண்டிருக்கையில் இனந்தெரியாதோர் மேற்படி உழவு இயந்திரத்தை தீயிட்டுக் கொழுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் உழவு இயந்திரத்தின இயந்திரம் முற்றாக தீப்பிடித்து எரித்துள்ள அதேநேரம் இவ் உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்தவர்கள் தப்பி ஓடி விட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை; மேற்படி பகுதிகளில் சட்டவிரோத மண் அகழ்வுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ந-52)



யாழ்.புறநகர் பகுதிகளில் உள்ள கழிவுநீர் வடிகால்கள் சிதைந்து போய் உள்ளதனால் கழிவுநீர் வழிந்து ஓடமுடியாது தேங்கி நின்று துர்நாற்றம் வீசுகிறது.

வண்ணார்பண்ணைப் பகுதியில் சிதைந்துபோன வடிகால் ஒன்றில் கழிவுநீர் தேங்கி நிற்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: க.பவன்)

# செய்தித் துளிகள்

### இரு சகோதரர்கள் நாய்க்கடிக்கு இலக்கு

(மருதங்கேணி)

விசர் நாய்க்கடிக்கு இலக்காகிய இரு சகோதரர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் 6ஆம் ஆண்டில் கல்வி கற்கும் ஜெயபிரியங்கா என்ற மாணவி விசர் நாயினால் மோசமாக கடியுண்ட நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் அதேவேளை, இச் சிறுமியின் சகோதரரான ஜெய பிரசாத் (வயது-7) எனும் சிறுவனும் காலில் விசர் நாய்க்கடிக்குள்ளாகி கிளி. மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-35)

### மேலதிக அரசாங்க அதிபராக சிவசாமி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலர் ஏ. சிவசாமி இன்று முதல் யாழ்.மேலதிக அரச அதிபராக பொறுப்பேற்கவுள்ளார்.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் ஓய்வு பெறுவதையடுத்தே இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (உ-52)

### தேர்தலின் பின் நாட்டில் நல்ல மாற்றம்

(கொழும்பு)

நடந்து முடிந்த 13வது பொதுத்தேர்தலின் பின் நாட்டில் மக்கள் எதிர்பாாத்த அளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது எனக் கைத்தொழில் சுற்றுலாத் துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதி அமைச்சர் அர்ஜுணரணதுங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கைத்தொழில் சுற்றுலாத் துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சராக ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து உரையாற்றுகையிலேயே அவா இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் எதிர்காலத்தில் மககள் ஆணையை பலப்படுததுவதன் மூலமாக கடந்த 2 வருடங்களில ஏற்பட்ட வீழ்ச்சியை மீட்டெடுக்க வேண்டுமெனவும் அர்ஜுணரணதுங்க குறிப்பிட்டார்.

(உ-61,8)

### பாதுகாப்புச் செலவினத்தை குறைப்பதற்கு முடிவு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்புச் செலவினங்களை 500 மில்லியன் ரூபாவினால் குறைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க இணங்கியிருப்பதாக நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத்திட்டத்திலேயே இவ்வாறு பாதுகாப்பு நிதி குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா, பாதுகாப்பு அதிகாரிகள், நிதியமைச்சின் அதிகாரிகள் ஆகியோர் இணைந்து நடத்திய கலந்துரையாடலின் பின்னரே இத்தகவலை நிதியமைச்சர் தெரிவித்துள்ளார். (த-121)

### மாங்குளத்தில் பண்பாட்டு பாசறை

(கொழும்புத்துறை)

வன்னி மாவட்ட தென்னிந்தியத் திருச்சபைகளுக்கான நற்செய்தி கலை பண்பாட்டுப் பாசறை நிகழ்வுகள் மாங்குளத்தில் உள்ள தென்னிந்திய திருச்சபை வளாகத்தில் இடம்பெறவுள்ளன.

தென்னிந்திய திருச்சபையின் யாழ்.ஆதீன நற்செய்திப் பணிக்குழுவினரது ஏற்பாட்டில் இன்று முதல் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இப் பாசறையில் திருமறைக்கலா மன்றத்தின் நாடகப் பயிலகத்தினர் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ந-51)

### தமிழக மீனவர் பிரதிநிதிகள் யாழ். வருவர்

(திருநெல்வேலி)

தமிழீழ மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் எதிர்வரும் 24ஆம் திக்தி திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

தமிழக மற்றும்வடக்கு, கிழக்கு மீனவர்களிடையே தொழில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்க்கும் வகையில் பேச்சுக்களை நடத்தவென எதிர்வரும் 20 ஆம் திகதி இலங்கை வரும் இவர்கள் 22ஆம் திகதி மன்னார் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுளளனர்.

இதேவேளை,24ஆம் திகதி அன்று வடமாகாணம் கடற்றொழிலாளர் சங்கங்களின சமாச அலுவலகத்தில் வைத்து சமாசப் பிரதிநிதிகள் இவர்களுடன் சந்திப்பை நடத்தவுள்ளனர்.

(உ-43)

### பிரதேச செயலர் மீது தாக்குதல்

(கொழும்பு)

கிங்குராங்கொட பிரதேச செயலாளர் கடந்த வெள்ளிக்கிழமை இனந்தெரியாதோர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

6 பேர் கொண்ட இனந்தெரியாத குழுவே இந்தத் தாக்குதலை நடத்தியிருப்பதாகவும் இத்தாக்குதல் சம்பவத்திற்கு அந்தப் பகுதியில் உள்ள அரசியல்வாதி ஒருவர் பின்னணியில இருப்பதாகவும் கிங்குராங்கொட பகுதிக்குப் பொறுப்பான பொலிஸ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாக்குதலில் காயமடைந்த பிரதேச செயலாளர் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-61,10)

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலயத்தின் கீழ் இயங்கும் யா/அனலை தீவு தெற்கு அ.த.க. பாடசாலை, யா/எழுவைதீவு றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றில் அதிபர் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

இப்பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை அதிபர் சேவை தரத்தைச் சேர்ந்தவர்களும் ஆசிரியர் தரம் 1,2-I,2-II ஐச் சேர்ந்தவர்களும் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவக வலயக் கல்வி பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(உ-18)

# உலக சாதனை படைத்த இலங்கை வீரர் முரளி

2004ஆம் ஆண்டானது டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் இரண்டு தனிப்பட்ட உலகசாதனைகளால் மகிழ்ந்து கொண்டிருக்கின்றது.

2004ஆம் ஆண்டின் சாதனைக்குச் சொந்தக்காரர்களாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பிறையன் லாரா மற்றும் இலங்கையணியின் நட்சந்திர சுழற்பந்து




வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஆகியோர் விளங்குகின்றனர்..

இந்த ஆண்டின் முதலாவது உலக சாதனை பிறையன் லாரா ஆட்டமிழக்காமல் பெற்ற 400 ஓட்டங்கள் ஆகும். அடுத்த உலகச் சாதனையாக நேற்று முன்தினம் சிம்பாப்வே அணிக்கெதிராக முரளிதரன் தனது 520வது விக்கெற்றை வீழ்த்தியதன் மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த கொட்னி வோல்ஷின் 519 விக்கெற் என்ற முன்னைய உலக சாதனையை முறியடித்தமை ஆகும்.

513 டெஸ்ட் விக்கெற் என்ற அடிப்படையில் சிம்பாப்வே அணிக்கெதிராக முதலாவது டெஸ்ட் போட்டியில் களமிறங்கிய முரளிதரன் அவ்வணிக்கு எதிராக முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெற்றினை வீழ்த்தியதன்





மூலம் மேற்கிந்திய வீரர் கொட்னி வோல்ஷின் உலக சாதனையை சமப்படுத்தினார். கிரிக்கெற் உலகின் எதிர்பார்ப்புக்கு அமைய சிம்பாப்வேயின் இரண்டாவது இன்னிங்ஸிற்காக பந்து வீசிய முரளிதரன், என்காலாவை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் தனது 520 ஆவது விக்கெற்றை வீழ்த்தி உலக சாதனையை ஏற்படுத்தினார்.

### முரளிக்கு வாய்த்த குரு

11 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெற் பயிற்சியில் சேர விருப்பமா? என்று அந்தச் சிறுவனிடம் கிரிக்கெற் பயிற்றுநர் கேட்டபோது அந்த மாணவன் அதற்குச் சம்மதிக்கவில்லை.

அம்மாவிடம் கேட்க வேண்டும். அம்மா அனுமதித்தால் வருகிறேன் என்று பதிலளித்தான். ஆனால், இப்போது அந்தச் சிறுவன் உலகம் போற்றும் கிரிக்கெற் வீரனாக திகழ்கின்றான். அந்தச் சிறுவன் வேறுயாருமல்ல· முத்தையா முரளிதரனே.

முரளிதரன் கல்விகற்ற கண்டி, கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியின் முன்னாள் கிரிக்கெற் பயிற்றுநர் சுனில் பெர்னாண்டோ முரளிதரன் பற்றி


உலக சாதனை விக்கெற்றை (520) வீழ்த்திய மகிழ்ச்சியில்

இப்படிக் குறிப்பிடுகின்றார்.

தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளராக முரளிதரன் தற்போது விளங்கினாலும், அவர் கிரிக்கெற் விளையாட ஆரம்பித்த காலத்தில் வேகப் பந்து வீச்சாளராக விளங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரி கிரிக்கெற் பயிற்றுநரான சுனில் பெர்னாண்டோதான் முரளிதரனை சுழற்பந்து வீச்சாளராக மாற்றினார். முரளி உலக சாதனையாளராகத் திகழ்வதற்குக் காரணமான மிகப் பெரிய திருப்பு முனை இது வாகும்.

''வேகப்பந்து வீச்சாளராக அவர் சில விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். ஆனால், இரு காரணங்களால் அவர் சுழற்பந்து வீச்சை மேற்கொள்வதை நான் ஊக்குவித்தேன்''. அதில் ஒன்று, அப்போது வேகப் பந்து வீச்சாளருக்குரிய உடல்வாகை முரளிதரன் கொண்டிருக்கவில்லை. மற்றையது எமது 15 வயதிற்குட்பட்டோருக்கான அணியில் ஏராளமான வேகப் பந்து வீச்சாளர்கள் இருந்தமையாகும்.

சுழற்பந்து வீச்சுக்கு மாறிய பின்னர் மாலியதேவ கல்லூரியின் 15 வயதிற்குட்பட்ட அணிக்கெதிரான முதலாவது போட்டியின் முதல் இன்னிங்ஸிலே 5 விக்கெற்றினை அவர் வீழ்த்தினார். இவ்வாறு முன்னாள் பயிற்றுநர் சுனில் பெர்னாண்டோ கூறுகிறார்.

### டெஸ்ட் போட்டியில் நுழைவு

17.04.1972ஆம் ஆண்டில் பிறந்த முரளிதரன் 1992இல் அவுஸ்திரேலிய அணிக்கெதிராகத் தனது டெஸ்ட் கிரிக்கெற் பயணத்தைத் தொடங்கினார். கராரேயில் சிம்பாப்வே அணிக்கெதிராக நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டி அவரின் 89ஆவது டெஸ்ட் போட்டியாகும்.,

மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் தலைவர் கொட்னி வோல்ஷ் 132 போட்டிகளில் 519 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளார். ஆனால், முரளிதரனோ 89 டெஸ்ட் போட்டிகளில் 521 விக்கெற்றினை வீழ்த்தியுள்ளார். கொட்னி வோல்ஷ் தனது 38வது வயதிலேயே இந்தச் சாதனையை ஏற்படுத்தினார். ஆனால், அந்த உலக சாதனையை தனது 32வது வயதில் முரளிதரன் முறியடித்தார். குறைந்த வயதிலும், குறைந்த போட்டிகளிலும் பங்கேற்று முரளிதரன் இந்தச் சாதனையை முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் 44 தடவைகள் 5 விக்கெற்றுக்களை வீழ்த்தியதுடன், 13 தடவைகள் 10 விக்கெற்றுக்கு மேல் வீழ்த்தி முரளிதரன் ஏற்கனவே சாதனை படைத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### முரளியை மறக்க முடியாதவர்கள்

1992ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான 2வது டெஸ்ட் போட்டியில் அறிமுகமான முத்தையா முரளிதரனின் முதலாவது விக்கெற்றுக்கு இலக்கானாவர் ஆஸி. அணியின் வேகப்பந்து வீச்சாளர் மக்டர்மட் ஆவார். இதன் பின் முரளி தனது 50ஆவது விக்கெற்றைத் தாண்ட சுமார் இரண்டு வருடங்கள் எடுத்தன.

✡ முரளியின் 50ஆவது விக்கெற்றிற்கு இலக்கானவர் இந்தியாவின் நவஜோத் சிங் சித்து. (1992 )

✡ முரளியின் 100ஆவது விக்கெற் தற்போதைய நியூசிலாந்து அணியின் தலைவர் ஸ்டீபன் பிளாமிங். (1996/97)

✡ 150ஆவது விக்கெற் சிம்பாப்வேயின் கயி விட்டேல் (1997/98)

✡ 200ஆவது விக்கெற் இங்கிலாந்தின் ஹொலி ஒக் (1999)

✡ 250ஆவது விக்கெற் - பாகிஸ்தானின் நவீட் அஷ்ர.்.ப் (1999/2000)

✡ 300ஆவது விக்கெற் - தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித் தலைவர் ஷோன் பொலக் (2000/01)

✡ முரளியின் 400வது விக்கெற்றிற்கு சிம்பாப்வேயின் ஹென்றி ஒலங்கா இலக்கானார்.

✡ 450ஆவது விக்கெற்றிற்கு நியூசிலாந்தின் டரல்ட.்.பி (2002/03)

## நோயல்

✡ முரளியின் 500ஆவது விக்கெற்றிற்கு இலக்கானவர் அவுஸ்திரேலிய அணியின் மைக்கல் கஸ்போவிச் (2004/05)

✡ பெறுமதியும், சாதனையும் மிகுந்த விக்கெற்றான 520ஆவது விக்கெற்றுக்கு இலக்கானவர் சிம்பாப்வேயின் என்காலா (08.05.2004)

### இடையில் வந்த பிரச்சினைகள்

1995ஆண்டு நடைபெற்ற போட்டியில் முரளி பந்தை வீசி எறிகிறார் என நடுவர் ரோஸ் எமர்ஸன் அறிவிக்கிறார். அப்போது இலங்கை அணிக்குத் தலைமை வகித்த அர்ச்சுன ரணதுங்க இதனை ஏற்காமல் அணியை மைதானததை விட்டு வெளியே அழைத்துச் செல்கின்றார்.

முரளிக்கு அப்போது தோன்றிய பிரச்சினை இன்னும் ஓய்ந்தபாடாக இல்லை. தற்போதும் பிரச்சினைக்கு மத்தியிலேயே முரளி இந்த சாதனையைப் படைத்திருக்கிறார். முரளியால் அறிமுகப்படுத்தப்பட்ட ''தூஸ்ரா'' (DOOSRA) பந்து வீச்சானது முறையற்றது என போட்டி நடுவர் கிறிஸ் புரோட் அறிவித்துள்ளமையால் பிரச்சினை மேலும் வலுப்பெற்றிருக்கிறது.

முரளியின் பந்துவீச்சுத் தொடர்பான ஆய்வில் அவர் தொடர்ந்து **DOOSRA** பந்தை வீசினால் ஒருவருட காலத்திற்கு அவருக்கு கிரிக்கெற் விளையாடுவதற்கு தடைவிதிக்கப்படும் என ஐசிசி கூறியிருந்தாலும் இது குறித்து (DOOSRA) முழுவதுமான அறிக்கை வரும்வரை இப்பாணியில் பந்தை வீசவேண்டாமென இலங்கைக் கிறிக்கெற் கட்டுபாட்டுச்சபை அவரைக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது

பண்பாளர்களின் விளையாட்டு எனவர்ணிக்கப்பட்ட கிர|க்கெற்றில் இப்படிக் காலத்துககு காலம ஒருவரைப்பற்றி தொடர்ச்சியாகச் குற்றச்சாடடுக்களை சுமத்திக் கொண்டே வருவது பண்பான செயலா? எனக் கேட்கத் தோன்றுகிறது

சர்வதேச கிர|க்கெற் சபையே முரளிதரனின் பந்து வீச்சுப்பாணியில் குற்றமில்லை எனக் கூறிய பிறகும் மைக் புரோட்டின் சர்ச்சை பண்பானதா என்று சிந்திக்கத் தோன்றுகிறது.

எப்படியிருந்தாலும் சாதனை படைத்துள்ள முரளிக்கு முன்னாள் கிரிக்கெற் வீரர்களும், போட்டி நடுவர்களும் பாராட்டைத் தெரிவித்துள்ளனர்.

அததுடன் இலங்கை ஜனாதிபதியும், பிரதமரும் முரளிக்கு பாராட்டு தெரிவித்துள்ளனர்.

| எதிரணி | போட்டி | விக்கெற் | இனிங்ஸ் ஒன்றில் சிறந்த பெறுபேறு | போட்டி ஒன்றில் சிறந்த பெறுபேறு | சராசரி | விக்கெற்றுக் களுக்கானவீதம | 5 விக். | 10 விக். |
|---|---|---|---|---|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | 10 | 50 | 6/59 | 11/212 | 32.26 | 3.01 | 5 | 1 |
| பங்களாதேஷ் | 02 | 20 | 5/13 | 10/98 | 10.45 | 2.32 | 4 | 2 |
| இங்கிலாந்து | 10 | 69 | 9/65 | 16/220 | 20.73 | 1.86 | 4 | 2 |
| இந்தியா | 12 | 51 | 8/87 | 11/196 | 32.94 | 2.63 | 3 | 1 |
| நியூசிலாந்து | 10 | 52 | 5/30 | 09/227 | 23.69 | 2.29 | 4 | 0 |
| பாகிஸ்தான் | 12 | 68 | 6/71 | 10/148 | 23.85 | 2.60 | 4 | 1 |
| தென்னாபிரிக்கா | 12 | 77 | 7/84 | 13/171 | 22.68 | 2.31 | 8 | 2 |
| மேற்.இ.தீவுகள் | 08 | 53 | 6/81 | 11/170 | 19.60 | 2.54 | 6 | 2 |
| சிம்பாப்வே | 13 | 81 | 9/51 | 13/115 | 17.09 | 1.77 | 6 | 2 |


சாதனை வீரரின் முதலாவது பந்து வீச்சு

# ஸ்ரீலங்காவின் கோரிக்கையை இந்தியா பரிசீலிக்கிறதா?

**கனடாவிலிருந்து சுதர்மா**

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசு பதவி யேற்றவுடன் அதன் பிரதமரான மகிந்த ராஜபக்ஷ முதற்கூற்றாக வெளிப்படுத்திய கருத்து சமாதான முயற்சிகள் அரசாங்கம் மீள ஆரம்பிக்கும் சமாதான முயற்சிகளில் இந்தியாவின் நேரடிப் பங்களிப்பு இருக்க வேண்டுமென்பதே இந்தியாவிற்கான அவரது வேண்டுகோளாக இருந்தது. தங்களது அரசைத் தக்கவைக்க முடியுமா என்பது தெளிவில்லாத ஒரு கால கட்டத்திலே விடுக்கப்பட்ட மேற்படி வேண்டுகோளானது நோர்வேயைத் தவிர்பதற்கான ஒரு வேண்டுகோளாகவே இருந்தது.

தாங்கள் தற்போது கூட்டணி அமைத்திருக்கின்ற ஜே.வி.பியும் இதர இனவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் நோர்வேயின் சமாதான முயற்சிகளிற்கான பங்களிப்பை எதிர்த்து வருகின்ற காரணத்தாலும், இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுத் திட்டமொன்றிற்கு உடன்படாதவையாகவும் இருப்பதனாலேயே ராஜபக்ஷவின் இந்த விருப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக மேற்படி இரு கட்சிகளினதும் ஆதரவைத் தக்கவைப்பதற்கான முயற்சியாகவே இது மேற்கொள்ளப்பட்டது. எனினும் ஸ்ரீலங்காவின் இந்த விருப்புக் குறித்த கருத்துப் பகிர்வதனையும் இந்திய மத்திய அரசு மேற்கொள்ளவில்லை.

### பொருளாதாரத்தின் நிலை

ஸ்ரீலங்காவில் எந்தவொரு கட்சி ஆட்சியமைத்தாலும் அது வெளிநாட்டுக் கடனையும் நிதியுதவியையும் தனது நிதித் தேவைகளிற்காக நம்பியிருக்க வேண்டியதே தற்போதைய யதார்த்தம். அத்தோடு ஸ்ரீலங்காவின் பொருளாதாரம் தனது நாணயப் பெறுமதியை மிதக்க விடுமளவிற்கு கடந்த காலத்தில் நலிவடைந்தது. இருந்தும் கடந்த மூன்று ஆண்டுகளிலும் முன்னேற்றமடைந்து வந்தது. எனினும் ஸ்ரீலங்கா தனது 13வது பாராளுமன்றத் தேர்தலை அறிவித்ததையடுத்து மீண்டும் பொருளாதார நிலை கீழிறங்கியதுடன், கொழும்புப் பங்குச்சந்தையும் சரிவைச் சந்தித்தது.

இதுவே தற்போதைய அரசு பேச்சுவார்த்தையை முன்னிறுத்துவதற்கான சூட்சுமமாக அமைந்துள்ளது. உதவி வழங்கும் நாடுகளின், நிறுவனங்களின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சியாகவே இந்தப் பேச்சுவார்த்தையை தற்போதைய அரசு முன்னெடுக்கிறது. எனினும் இந்த அரசின் முதற் பலப்பரீட்சையான சபாநாயகர் தெரிவில் ஆளும் கூட்டணி தோற்றுப் போனதானது இந்த அரசின் ஸ்திரத்தன்மை அல்லது பெரும்பான்மைப் பலம் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. அதனையடுத்தே இந்திய ஆதரவு எனும் படலத்தை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்டுள்ளார்.

### லக்ஷ்மன் கதிர்காமரின் இந்திய விஜயம

தாங்கள் கூட்டணி அமைத்துள்ள கட்சியின் நிலைப்பாடான நோர்வே மற்றும் ஜப்பானை சமாதான முயற்சிகளிலிருந்து புறந்தள்ளுதல் என்ற நிலைப்பாட்டிற்கு எதிராகச் செயலாற்ற முடியாத ஒரு நிலையில், இந்தியாவின் நேரடிப் பங்கு பெறப்பட்டால் மேற்படி கட்சியின் நிபந்தனையின் வேகத்தை தணிய வைக்கலாம் என்ற எதிர்பார்ப்பே அவரை இவ்வாறான ஒரு பயணத்திற்குத் தள்ளியுள்ளது. அதுகூட இந்திய மத்திய அரசிற்கான தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் தற்போதைய காலகட்டத்தில் பதவி வகிக்கும் காபந்து அரசை நாடுமளவிற்கு அவர்களது தேவை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. புதிய அரசொன்று இந்தியாவில் பதவியேற்பதற்கு மூன்று வாரங்களே உள்ளபோதும் கூட, இந்தக் குறுகிய காலப் பொழுதைக்கூட காத்திருப்பிற்காக எடுத்துக்



கொள்ள முடியாத நிலையில் ஸ்ரீலங்கா உள்ளது என்பது அதன் இந்திய எதிர்பார்ப்பின் தன்மையையும் எடுத்தியம்புகிறது. இதுவரை காலமும் இந்தியத் தூதுவரான நிருபம்சென் அவர்களின் ஒவ்வொரு நகர்வும் இந்தியாவின் சமிஞ்ஞைகளைப் போலவே சிங்களவர்களால் உள்வாங்கப்பட்டது. குறிப்பாக தூதுவர் நிருபன் சென்னினது ஒவ்வொரு நடவடிக்கைக்கும் தங்களிற்கு பிடித்தமான வகையில் அர்த்தம் கற்பித்து அகமகிழ்வதையே அவர்கள் வாடிக்கையாகக் கொண்டிருந்தனர். இவ்வாறானதொரு கட்டத்தில் இடம்பெற்ற கதிர்காமரின் இந்தி யவிஜயத்தின் முக்கிய நோக்கம் “தங்களது அரசைத் தக்கவைப்பதே” என்பதை கதிர்காமர் டெல்லியில் வைத்து வழங்கி செவ்வியொன்றில் தெளிவாகத் தெரிவித்திருந்தார். பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத தங்களது பாராளுமன்ற அரசு தொடர்ந்தும் நிலைக்கும் என்றே இந்திய அரசியல்வாதிகள் கருதுவதாகவும், எனவே தான் நாட்டின் சகல கட்சிகளினதும் விருப்பை இந்தியாவிற்கு அறிவிப்பதற்காக தான் இவ்வளவு விரைவாக டெல்லிக்கு வருகை தந்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக இந்தியா தொடர்பான பார்வை ஸ்ரீலங்காவின் அரசியல் கட்சிகளிடமும் பெரியதொரு மாற்றத்தை உள்ளாக்கியிருக்கிறது என்றும், இந்தியா இந்த சமாதான முயற்சிகளில் நேரடியாகப் பங்கெடுக்க வேண்டுமென்றும் தெரிவித்த அவர் ஜே.வி.பி. பௌத்த பிக்குக்கள் உள்ளிட்ட சகலரிடமும் சந்தேகம் ஏற்பட்டிருப்பதாகவும், ஏன் விடுதலைப் புலிகளிடமும் இந்த மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் கூறிய கதிர்காமர் இந்த யதார்த்தத்தைப் புரியவைக்கவே தான் முயன்றுவருவதாகத் தெரிவித்திருந்தார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் தமது தேவைகளிற்காக புலிகளையும் கதிர்காமர் துணைக்கழைத்திருக்கிறார் என்பதே.

### மாற்றுத் திட்டம்

இந்தியா நேரடிப்பங்கேற்றல் என்ற நிலைப்பாட்டிற்கு இந்தியா கரிசனைக்கு எடுக்குமா என்ற சந்தேகத்தை நிறையவே கொண்டுள்ள கதிர்காமர் அதற்கான மாற்றுத் திட்டமொன்றினை முன்வைத்தார். தற்போதைய சமாதானப் பேச்சு வார்த்தையில் வட-கிழக்குப் புனர்வாழ்வு மிகப்பெரிய சுமையாக உள்ளதெனவும், அதனால் வடகிழக்குப் பகுதிகளைப் புனரமைக்கும் பணிகளில் இந்தியா ஈடுபடுவதன் மூலம் நோர்வேயினால் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகளில் பங்காற்றலாம் எனவும் அவ்வாறு செய்வதன் மூலம் பேச்சுக்களில் நேரடியாகப் பங்கேற்கும் தன்மையை இந்தியா பெறலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

கதிர்காமரின் இந்தக் கருத்துக்கள் ஒன்றோடு ஒன்று முற்றிலும் முரணானவை. இந்தியாவை எப்படியேனும் தமது பொறிக்குள் விழ வைக்கும் முயற்சியின் உச்சக்கட்டப் பிரயோகமாகவே மேற்படி இரு வழிகளையும் இந்தியாவிற்கான தெரிவுகளாக சிங்களம் முன்வைத்துள்ளது. கடந்த அரசு கூட இந்தியாவின் பங்களிப்பை பெறுவதற்கு தன்னாலான முயற்சிகளை முழு அளவில் மேற்கொண்டிருந்த போதும், அதனால் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றியையே பெறமுடிந்தது. ஆனால் எப்படியாவது இந்தியவின் ஆதரவைப் பெற்றேயாக வேண்டும் என்ற நிலையிலே ஸ்ரீலங்கா தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

### இந்தியாவின் நிலைப்பாடு

இவ்வாறானதொரு நிலையைத் தம் மீது திணிப்பதற்கு ஸ்ரீலங்கா முயல்கிறது என்பதைத் தெளிவாகவே இந்தியா அறிந்திருந்தது. இதன் காரணமாகவே கதிர்காமர் டெல்லி சென்றதும் இந்தியா வெளியிட்ட அறிக்கையில், ஸ்ரீலங்கா புலிகளுடனான பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கும் என தாம் நம்புவதாக அறிவித்திருந்தது.

அதன் பிற்பாடு கதிர்காமர் காபந்து அரசின் வெளியுறவு அமைச்சரான ஜஸ்வந்த் சின்ஹா மற்றும் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகரான பிரஜேஸ் மிஸ்ரா ஆகியோரைச் சந்தித்த போது சமாதானம் தொடர்பான சமாளிப்புக் கருத்து வெளிப்பாடுகளையே அவர்கள் மேற்கொண்டிருந்தார்கள். குறிப்பாக, கடந்த காலத்தில் இலங்கை சார்ந்த கொள்கைகளில் இந்தியா தவறுகளை விட்டுள்ளது எனவும், இலங்கையின் சகல தரப்புக்களும் சமாதான முயற்சிகளில் மீண்டும் இந்தியா பங்காற்றுவதை விரும்பும் பட்சத்தில் அது ஆராயப்படலாம் என்றும் தெரிவித்த ஜஸ்வந்த் சின்ஹா, இந்தியா சமாதானப் பேச்சுக்களில் எவ்வாறான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென ஸ்ரீலங்கா விரும்புகிறது என்பதை தெளிவுபடுத்தும்படி கேட்டுள்ளார்.

மறுபுறத்தே ஸ்ரீலங்கா அரசிற்கான பூரண ஆதரவை இந்தியா வழமைபோல வழங்கும் என பாதுகாப்பு ஆலோசகர் பிரஜேஸ் மிஸ்ரா தெரிவித்துள்ளார். தற்போதைய தேர்தல் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபட்டிருக்கும் வெளியுறவு அமைச்சர் சகல தரப்புக்களும் விரும்பும் பட்சத்தில் இந்தியா பங்காற்றுவதைப் பரிசீலிக்கும் என்று சென்னையில் வைத்து வெளியிட்டுள்ள மேற்படி கருத்துக்கள் ஒரு தேர்ந்த அரசியல்வாதியின் வாக்குவேட்டையே தவிர வேறொன்றுமில்லை. அடுத்த அரசு அமைப்பது யார் என்பது பற்றிய கவலையைக் கொண்டுள்ள ஜஸ்வந்த் சின்ஹாவிற்கு தமிழ் நாட்டில் வைத்து இவ்வாறு தெரிவிப்பதைவிட வேறு வழியுமில்லை. அதுவே தமது சந்திப்பு எதிர்பார்த்ததிலும் வெற்றியாக அமைந்தது என்ற கதிர்காமரின் கூற்றை நாம் நிராகரிப்பதற்கான காரணமாகவும் அமைந்துள்ளது.

### இந்தியாவின் பங்களிப்புக்கான தேவை

இந்தியாவின் பங்காற்று கையை இப்பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே சர்வதேசம் கோரியிருந்தது. நோர்வே மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இதுதொடர்பான செய்திப் பரிமாறல்களை தமது வெளியுறவு அமைச்சர்களினூடாவே மேற்கொண்டிருந்தனர். ஏன்? தமிழர் தரப்புக் கூட இந்தியப் பங்களிப்புத் தொடர்பான தனது ஆவலை வெளிப்படுத்தியிருந்தது. எனினும் இந்தியா இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகளில் கலந்து கொள்வதால் தான் பல மாற்றங்களிற்குள்ளாக வேண்டும் என்பதைத் தெளிவாகப் புரிந்திருந்தது. அம்முயற்சி எவ்வாறான பெறுபேற்றைத் தரும் என்பதை அறிந்து கொள்ளாமல் அது தன்னை இம்முயற்சியில் ஈடுபடுத்த விரும்பவில்லை.

பேச்சுக்களில் பங்காளியாவதற்கு முன்பாக தமிழர் தரப்பின் மீதான தடையகற்றலை மேற்கொள்ள வேண்டிய தேவை இந்தியாவிற்குள்ளது. தமிழர் தரப்புப் பங்குபற்றும் மாநாடுகளிலேயே பங்குபற்றுவதைத் தற்போது தவிர்த்து வரும் இந்தியா அவ்வாறானதொரு கொள்கை மாற்றத்தைப் பெற்றால் மாத்திரமே இந்தியப் பங்களிப்பு என்பது இலங்கை இனப்பிரச்சினையில் சாத்தியம்.

இரு தரப்பும் சம பலத்துடன் பேசுவதற்கு இது இன்றியமையாதது. அத்தோடு விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்ற சர்வதேச நிலைப்பாட்டையும் அது உள்வாங்க வேண்டும். இந்த இரண்டு விடயங்களும் நடைபெற்றால் மாத்திரமே இந்தியப் பங்களிப்பு என்பது இலங்கை இனப்பிரச்சினையில் சாத்தியப்பாடானதாகும் ✳

## இருவேறு விபத்தில் இருவர் பலி

(கொழும்பு)

கொழும்பு சுகததாஸ விளையாட்டு அரங்கிற்கு முன்னால் உள்ள வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் மரணமாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொள்கலன் ஒன்றுடன் வான் ஒன்று மோதியதையடுத்தே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, நேற்று அதிகாலை 12.40மணியளவில் தெல்ஹந்தப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

முச்சக்கர வண்டியொன்றும் பாரவூர்தி ஒன்றும் மோதியதையடுத்து இந்த உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.இதுதவிர மேலும் ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ந-121)

# கல்வியியல் தொடர்பான வழிகாட்டல் குறிப்புக்கள்

**இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்களை உள்வாங்கும் வகையில் இடம்பெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கு வழிகாட்டும் வகையில் கல்வியியல் சார்ந்த குறிப்புக்கள் இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.**

1948(டிசம்பர்) ஐக்கிய நாடுகள் பொதுச் சபை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை ஏற்றுக் கொள கிறது. எல்லா மக்களுக்கும் கல்வி ஓர் அடிப்படை உரிமை என்பது பிரகடனமாகிறது.

1959 (நவம்பர்) ஐ.நா. பொதுச் சபை சிறுவர் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை ஏற்றுக் கொள்கிறது. ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறும் உரிமையுடையது என்பது பிரகடனமாகிறது.

1960-1966 யுனெஸ்கோ நான்கு உலகப் பிராந்தியக் கல்வி மாநாடுகளை நடத்தியதன் பயனாக எல்லாப் பிள்ளைகளுக்கும் குறிப்பிட்ட கால வரையறைக்குள் இலவசமாகவும் கட்டாயமாகவும் தொடக்கக் கல்வி புகட்டப்படுவதற்கான பிராந்திய இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த மாநாடுகள் கராச்சி (1960),அடிஸ் அபாபா (1961), சந்தியாகோ(1962), திரிப்பொலி (1966) ஆகிய நகரங்களில் நடைபெறுகின்றன.

1969(ஜனவரி) சகல வகையான இனப் பாகுபாடுகளையும் நீக்குதல தொடர்பான சர்வதேச சமவாயம் நடைமுறைக்கு வந்து, சாதி அல்லது இனவேறுபாடுகளை பொருட்படுத்தாமல், சகலரும் கல்வி கற்கும் உரிமை உடையவர்கள் என்பது பிரகடனமாகிறது.

1976(ஜனவரி)பொருளாதார,சமூக, கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாடு நடைமுறைக்கு வந்து,கல்வி கற்கும் உரிமையைச் சகலருக்கும் உத்தரவாதஞ் செய்கிறது.

1979(ஜனவரி) சிறுவர்களின் உரிமகள் தொடர்பான பிரகடனத்தில் சொல்லப்பட்டிருக்கும் கொள்கைகளுக்குப் புத்துயிரூட்டி, பிள்கைளின் விசேட தேவைகள் பற்றிய உணர்வைத் தட்டியெழுப்பும் பொருட்டு சர்வதேச சிறுவர் ஆண்டு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

1980 லத்தீன் அமெரிக்காவிலும ஆசியாவிலும் தொடக்கக் கல்வி பயில்வோரின் தொகை இரு மடங்காகவும் ஆபிரிக்காவில் மும்மடங்காகவும் அதிகரித்தாலும், 1980ஆம் ஆண்டளவில் எல்லோர்க்கும் ஆரம்பக் கல்வி என்னும் இலட்சியம் நிறைவேறாதிருக்கிறது. வளர்முக நாடுகளில் ஆறு முதல் 11வயது வரையான பிள்ளைகளில், சுமார் மூன்றில் ஒரு பங்கினரும் தொழில் வள நாடுகளில் சுமார் பன்னிரண்டில் ஒரு பங்கினரும் பள்ளி செல்லாதிருக்கிறார்கள்.

1981(செப்டெம்பர்)பெண்கள் மீதான சகல பாகுபாடுகளும் நீக்கப்படுதல் தொடர்பான சமவாயம் நடைமுறைக்கு வருகிறது. இதன்படி, பெணகள் மீதான பாகுபாடுகளை நீக்குவதுடன், கல்வித் துறையில் சம உரிமைகள் வழங்கப்படவும் வேண்டும்.

1982 கடன்பளு தொடர்பான நெருககடிகள் தொடங்குகின்றன. பல நாடுகள் தமது கடன் சார் கொடுப்பனவுகளை இடைநிறுத்தப் போவதாக அறிவித்ததையடுத்து, வர்த்தக வங்கிகள் வளர்முக நாடுகளுக்குக் கடன் வழங்குவதை நிறுத்திக் கொண்டன. சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் நிதிக் கட்டுக்கோப்பைச் சீர செயயும்படி கோரி, நிதிவழங்க முன்வருகின்றன. கல்வி உள்ளிட்ட பொதுத துறைச சேவைகள் மோசமாகப் பாதிக்கப்படுகின்றன

1985(யூலை)மூன்றாம் உலகப் பெண்கள் மாநாடு(நைரோபி) நடைபெறுகிறது.பெண்களின் நிலையை மேம்படுத்துவதற்குக் கல்வியே அடிப்படை என்பது பிரகடனமாகிறது. போதனா நூல்கள், உபகரணங்களில் பெண்ணியத்திற்கு பாதகமான அம்சங்களை நீக்கவும் பெண்கள் பற்றிச் சாதகமாகப் பேசும் விடயங்களைப் பாட நூல்களில் சேர்த்துக் கொள்ளவும்,பெண்களின் ஆராசசிகளை உள்ளடக்கி பாட விதானத்தைப் புதிதாக வகுக்கவும் இம் மாநாட்டிற் பங்கு கொண்ட அரசாங்கங்கள் உடன்பட்டன.

1990(மார்ச்)"எல்லோருக்கும் கல்வி" தொடர்பான உலக மாநாடு (ஜொம்தியன்) நடைபெறுகிறது. ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனம் (UNESCO), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், (UNICEF), உலக வங்கி ஆகியனவும் பிற்பாடு ஐக்கிய நாடுகள் சனத்தொகை மேம்பாட்டுத் ஸ்தாபனமும் (UNFPA) கூட்டாக ஏற்பாடு செய்த இந்த மாநாட்டிலே அடிபபடைக் கல்வி தொடர்பாக விசாலமான நோக்கைக் கொண்ட உலகளாவிய கருத்தொருமைப்பாடு முன் வைக்கப்பட்டது.

(செப்டெம்பர்)சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் நடைமுறைக்கு வருகிறது. எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி பயிலும் உரிமையுடையவர்கள் என்னும் கொள்கை சர்வதேச சட்டமாகிறது.

(செடெம்பர்) சிறுவர்களுக்கான உலக உச்சி மாநாடு (நியூயோர்க்). கல்வித்துறை தொடர்பான பல் வேறு இலக்குகள் பற்றி 159 நாடுகள்உடன்பாடு தெரிவிக்கின்றன. சகலருக்கும் ஆரம்பக் கல்வி பெறும் வாய்ப்பளிக்கப்படல் வேண்டுமென்பதும் 2000ஆம் ஆண்டளவில், தொடக்கப் பள்ளிப் பருவத்தினரில் 80சத வீதத்தினரேனும் தொடக்கக் கல்வியைப் பூர்த்தி செய்தல் வேண்டுமென்பதும் மேற்படி உடன்பாட்டில் அடங்கின.

(டிசம்பர்) புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரினதும் உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான சர்வதேச பிரகடனம் ஐக்கிய நாடுகள பொதுச்சபையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இந்தப் பிரகடனம் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் அழைப்பின் பெயரில் உழைக்கும் தொழிலாளர்கள் ஆகிய அனைவரின் பிள்ளைகளும் கல்விபயிலும் உரிமையுடையவர்கள் எனப் பறைசாற்றுகிறது.

1993(டிசம்பர்) 9நாடுகளின் (E-9) கலவித்துறை உச்சி மாநாடு (புதுடில்லி வளர்முக உலகின சனத்தொகை 9நாடுகளின் (பங்களாதேசம், பிரேசில், சீனா, எகிப்து, இந்தியா, இந்தோனேசியா, மெக்சிகோ, நைஜரியா, பாகிஸ்தான்) அரசாங்கப் பிரதிநிதிகள் கூடி, 2000ஆம் ஆண்டளவில் அனைவருககும் ஆரம்ப் கல்வி என்னும் இலக்கை அடைவதென்று உறுதி பூணுகிறார்கள்.

டிசம்பர் (ஐக்கிய நாடுகள் பொதுச் சபை) ஊனமுற்றவர்களுக்கு சம சந்தர்ப்பம் வழங்குவதற்கான ஐக்கிய நாடுகளின் தராதர நிதிகளை அங்கீகரித்து, ஊனமுற்ற பிள்ளைகள், இளைஞர்கள், வளர்ந்தவர்கள் ஆகியோருக்கு எல்லா மட்டங்களிலும் சமனான கல்வி வாய்ப்புகள் உண்டென்பதை அரசுகள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று பிரகடனம் செய்கிறது.

1994(ஜூன்) கல்வி சார்ந்த விசேட தேவைகள் தொடர்பான உலக மாநாடு வாய்ப்பும் சமத்துவமும் (சலமன்கா) எல்லா நாடுகளும் தமது தேசிய கல்வி நெறியில் கல்வி சாந்த விசேட தேவைகளைச் சேர்த்துக்கொளள வேண்டும் என்று மேற்படி மாநாட்டில் பங்குபெற்ற அரசாங்கங்கள் பிரகடனம் செய்தன.

(செப்டெம்பர்) சனத்தொகை மேம்பாடு தொடர்பான சர்வதேச மாநாடு (கெய்ரோ) 2015ஆம் ஆண்டளவில் தரச்சிறப்புமிக்க ஆரம்பத் தொழில்நுட்ப மற்றும் முறைசாராக் கல்வி வாய்ப்ப அனைவருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்தல் வேண்டும் என்றும், பெண் கல்விக்கு விசேட முக்கியத்துவம் அளித்தல் வேண்டும் என்றும் இம் மாநாட்டிற் பங்குபெற்றவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

(செப்டெம்பர்) நான்காவது மகளிர் உலக மாநாடு (பேஜிங்), கல்வித்துறையில் சகல மட்டங்களிலும் பாகுபாடுகள் நீக்கப்படல் வேண்டும் என்றும் பெண்ணியச் சார்புடைய கல்வி அமைப்பு உருவாக்கப் படல் வேண்டும் என்றும், கல்வி, பயிற்சி ஆகிய துறைகளில் பெண்களுக்குச் சமவாய்ப்பு வழங்கப்படல் வேண்டும் எனறும் இம்மாநாட்டில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1996 (ஜூன்) சகலருக்கும் கல்வி தொடர்பான சர்வதேச ஆலோசனை மன்றத்தின் நடுத் தசாப்தக் கூட்டம் (அம்மான்), 1990இல் சகலருக்கும் கல்வி என்னும் விடயம் தொடர்பாக 2000ஆம் ஆண்டில் அடைய வேண்டிய இலக்குகள் சம்பந்தமாக எந்தளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதெனபதை மேற்படிக் கூட்டம் ஆராய்ந்தது.

1997(ஒக்ரோபர்) பாலிய ஊழியம் தொடர்பான சர்வதேச மாநாடு (ஒஸ்லோ) பிள்ளைகளின் படிப்புக்கு இடையூறாக அமையும் எந்த வேலையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல வென்றும், சகலருக்கும் தரச்சிறப்பு மிக்க அடிப்படைக் கல்வி புகட்டுதற்கென காலவரையுள்ள செயற்றிட்டங்கள் உருவாக்குதென்றும் இத் திட்டங்களில் பெண். கல்விக்கு விசேட முக்கியத்துவம் அளிப்பதென்றும் இம்மாநாட்டில் பங்குபெற்ற அரசாங்கங்கள் பிரகடனம் செய்தன.

## இலங்கைக் கல்விப்பரப்பு

* சட்ட நிரூபன சபை பிரதிநிதியான குமாரசாமி 1865ஆம் ஆண்டு முறையான கல்வி அபிவிருத்திக்கு ஓர் ஆணைக்குழு தேவை எனக் கூறினார்.

**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
**ஆசிரியர்,**
**யா:சரவணை சின்னமடு றோ.க.த.க.பாடசாலை,**
**தீவக வலயம்.**

* 1865இல் மோர்கன் குழு நியமிககப்பட்டு, அவர்களின் சிபார்சின படி 1869இல் பொதுக் கற்பித்தல் திணைக களம் T.Sவோரின் என்பவரை பணிப் பாளராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது.

* பின்னர் சமய மறுமலர்ச்சிகளின் அடிப்படையில் 1870இல் வைத்தியக் கலலூரியும் 1884இல் விவசாயக் கல்லூரியும் 1893இல் தொழில் நுட்பக் கல்லூரியும் 1895இல் சட்டக் கல்லூரியும் உருவாகின.

* 1906இல் சேர்பொன் அருணாச்சலம் தலைமையில் இலங்கையில் உயர் கல்வி வரலாற்றில் தேசிய பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேணடும் என்ற நோக்கத்தில் இலங்கைப் பல்கலைக்கழகச் சங்கம உருவாக்கப்பட்டது.

* 1912இல் கொழும்பு பல்கலைக கழக கல்லூரி லண்டன் பல்கலைக கழகத்துடன் இணைக்கப்படட நிறுவனமானது. பிற்காலத்தில் 1942இல் இலங்கைப் பல்கலைக்கழகமாக தோற்றம் பெறலாயின.

* 1920-முதலாம் இலக்க கல்விச் சட்டம் அமுலாக்கம்.

* 1927இல் C.W.W.கன்னஙகரா அவர்கள் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளமும் பின்னர் ஓய்வூதியத் திட்டம் பெறவும் உழைத்தார்.

* 1939-31ஆம் இலவசக் கல்விச் சட்டம் வரையப்பட்டது.

* 1943-விசேட கல்வி ஆணைக் குழு அறிக்கை வெளியிடப்பட்டது.

* 1945இல் இலவசக் கல்வி அறிமுகம் செய்யப்பட்டது.

* 1945இல் சுயபாஷைக் கல்வி தோற்றம் பெற்று 1960வரை இடம் பெற்றது.

* 1950ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கை வெளியானது. அனைத்து பாடசாலைச் சிறுவர்களுக்கும் நண்பகல் உணவு நிகழ்ச்சித் திட்டம் விரிவாக்கப்பட்டது.

* 1951இல் இலங்கை வானொலி கல்விச்சேவை ஒலிபரப்பை ஆரம்பித்தது.

* 1952இல் வறிய குடும்பங்களில் இருந்து வரும் திறமையான வர்களின் நன்மைக்காகப் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

* 1960இல் வேலை அனுபவம என்ற நிகழ்ச்சித் திட்டமாக பாடசாலை மாணவர்கள் சமூகத்தின் பல் வேலைத் தளங்களுக்குச் சென்று அனுபவம் பெறும் திட்டம் தொடங்கியது.

* 1961இல் காலப் பகுதியில் பாடசாலை முறைமைகளை ஒழுங்கு படுத்தும் நோக்கில பெரும்பாலான பாடசாலைகளை அரசாங்கம் பெறுப்பேற்றுக்கொண்டது. இவற்றை நிர்வகிக்க கல்வித் திணைக்களச் செயற்பாடுகளும் பரவலாகின. பிரதேச மாவட்டக காரியாலயங்கள் திறக்கப்பட்டன. (உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள், ஆசிரியக் கலாசாலைகள் விநியோகச சட்டம் 1960-61).

* 1959இல் பாடசாலைக்குச் செல்லாத பிள்ளைகள் பற்றி ஆராய்ந்த குழுவும் 1961 கல்வி ஆணைக்குழுவும் 1964-67 வெள்ளையறிககைகளும் கட்டாயக் கல்வி பற்றிக் கூறின.

* 1964கல்வி வெள்ளை அறிக்கை பொதுக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி என்ற நோக்கில் தேசிய கல்விமுறை ஒன்றிற்கான ஆலோசனைகளை வழங்கியது.

* 1966இல் வித்தியோதைய (சிறி ஜேயவர்த்தனபுர) வித்தியாலங்கார (களனி) என்பன முழு நிறைப் பல்கலைக்கழகங்களாகின. (1966 உயர்கல்விச் சட்டம்) 1967இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கொழும்புப் பிரிவாக இயங்கிய கொழுமபுப் பல்கலைக்கழகம் சுதந்திரமுடையதாக்கப்பட்டது.

* 1970களின் பின் மேற்கொள்ளப்பட்ட சீரமைப்புக்கள் பாடவிதானம் பொதுக் கல்வி அமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தின. இவற்றின் தொடர்ச்சியாக 1972 கல்வியின் புதிய பாதையினூடாகப் பாட ஏற்பாடு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 9ஆம் ஆண்டு பொதுக் கலைத் திட்டம், தொழில் முன்னிலை பாடம், தேசிய உயர்கல்விச் சான்றிதழ், பரீட்சை போன்ற அம்சங்கள் இணைக்கப்படடன. செயல் முறைக் கல்விக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

* 1972இல் கட்டுபத்த பல்கலைக் கழகமும், 1974இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகமும் ஆரமபிக்கப்பட்டன. 1970 வரை பல்கலைக் கழகக் கல்வி திறமை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பின்னர் வெட்டுப் புள்ளித் திட்டம் பல தாக்கங்களை ஏற்படுத்தியது.

* 1978இல் கல்வி உயர்கல்வி அமைச்சு உருவாக்கப்பட்டது. 1979இல் பல்கலைக்கழகங்களைப் பொதுவாக இணைத்து ஒருங்கிணைத்து முறைபபடுத்தும் சபையாகத் தொழிற்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நிறுவப்பட்டது.

* 1979இல் பெற்றோர் சாசனம் வெளியிடப்பட்டது. மாணவர்களது பாடசாலைக் கல்வியில் பெற்றோரின் கடமைகள், உரிமைகள் பற்றி இது தெளிவுறுத்தியது. இதே ஆண்டு கல்வச் சேவைகள் அமைச்சும் உருவாக்கப்பட்டது.

* 1980இல் கல்விசார் ரீதியில சுயமாக இயங்கும் தேசிய பல்கலைக் கழகமாகத் திறந்த பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இதே ஆண்டு பாடசாலைகளில் நூல்களை இலவசமாக வழங்கும் ஏற்பாடுகள் ஆரம்பமாகின.

* 1981இல் முதல் தடவையாக உயர் கல்விக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மகாபொல புலமைப்பரிசில் திட்டம் மூலம் பண உதவி வழங்கப்பட்டது.

* 1982இல கல்வி வெள்ளை அறிக்கையினூடாக ச கப் பொருளாதார அரசியல் நல்லொழுக்கத் தேவைகளை வழங்க சிபார்சுகள் வழங்கப்பட்டன. பாடசாலை அமைப்பு நோககங்கள், தொடர் மதிப்பீடு, ஒழுங்கமைப்பு, நிர்வாக முறைகள் பற்றியும், வாழ்க்கைத் திறன் பாடமும் அறிமுகமாகின. தொடர்ந்து கொத்தணிப் பாடசாலைகள் முறை ஆரம்பிக்கப்பட்டன. இதில் யாழ்.மாவட்டத்தில் புங்குடுதீவுக் கொத்தணியும் அடங்கும்.

* 1982இல் ஒவ்வொரு பாடசாலைகளிலும அபிவிருத்திச் சங்கம அமைக்கப்பட்டன. 1983இல் ரூபவாஹினி தொலைக்காட்சியில் கல்விச் சேவை ஆரம்பமானது.

* 1984இல் மாத்தறையில் றுகுணு பல்கலைக்கழகமும் 1986 இல் மட்டக்களப்பில் கிழக்குப் பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டன.

* 1985இல் கல்விசார் ஆராய்ச்சி ஆசிரியர்களின் பாடவிதான அபிவிருத்தி மற்றும் ஆளணியினரின் பயிற்சி என்பவற்றினை பொறுப்பேற்பதற்காக தேசிய கல்வி நிறுவகம் உருவானது.

* 1985இல் தொழில்சார் ரீதியில் தகமைபெற்ற புதிய ஆசிரியர்களை வழங்குவதற்காக கல்விக் கல்லூரிகள் நிறுவப்பட்டன. தேசிய பாடசாலைகள் என்ற கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டதுடன், முழு நிலைப் பாடசாலைகள் தேசியப்பாடசாலைகளாக தோற்றுவிக்கப் பட்டன.

* 1988இல் இலங்கை அரசியல் அமைப்பின் 13வது சீர்திருத்தம் காரணமாக 8 மாகாண சபைகளுக்கு நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் கல்விக் கடமைகள் பல மாகாணக் கல்வி அமைசசுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகக் கடமைகளாக,

1. திட்டமிடல்
2. நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தலும், மதிப்பீடு செய்தலும் இயைவுபடுத்தலும்.
3. தீர்மானம் மேற்கொள்ளுதலும் மேற்பார்வை செய்தலும்.
4. மனிதவள முகாமைத்துவம்
5. நிதி பங்கீடும் கணக்காய்வும்
6. பொறியியற்துறை சேவைகள்

* பிரிவு அலுவலகங்கள் உருவாக்கப்பட்டதன் மூலம் 1990இல் பன்முகப்படுத்தப்பட்ட கல்வி நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டது. அது எதிர்பார்த்த விளைவைத் தராததால் பிரிவு அலுவலகங்கள் 1995 இல் வலயக்கல்வி அலுவலகங்களாக மாற்றப்பட்டன.

* 1991இல் தேசிய கல்வி ஆணைக் குழு ஸ்தாபிக்கப்பட்டது.

* 1992இல் தேசிய கல்வி ஆணைக் குழுவின் முதலாவது அறிக்கை வெளியிடப்பட்டது.

* 1993இல் இலவச சீருடைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

* 1994இல் புதிய இலஙகை ஆசிரிய சேவை உருவாக்கப்பட்டு, ஆசிரியர்களின் கல்வித்தகமை, தொழிற் தகமை, சேவை நலன் என்பவறறை அடிப்படையாகக்கொண்டு பொருத்தமான தரங்களுக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டனர்.

* 1995இல் மாறிவரும் பொருளாதார, ஏனைய தேவைகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய நன்கமைந்த புதிய கல்வி முறையின் தேவை உணரப்பட்டு, தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கேற்ப தேசிய கல்விக கொள்கை ஒன்று வரையப்பட்டது. இதே ஆண்டு பெலிகுல் ஓயாவில் சம்பரகமூவா, பல்கலைக்கழகமும் அனுராதா புரத்தில் இராசரட்டைப் பல்கலைக்கழகமும் நிறுவப்பட்டன.

* 1996இல் ஒலுவிலில் தென் கிழக்குப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது.

* 1996இல தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தவும, சீரமைப்புக்களைச் செய்யவும் செயன் முறைத் திட்டங்களைத் தயாரிக்கவும் "ஜனாதிபதி செயலணிக்குழு" ஒன்று நியமிக்கப்பட்டது.

* 1997ஐ கல்விச் சீர்திருத்த ஆண்டாக ஜனாதிபதி பிரகடனம் செய்தார்.

* 1998இல் புதிய கல்விச் சீர்திருத்தம் கமபகாவில் முதன் முதல் பரீட்சார்த்தமாக அறிமுகம் செய்யப்பட்டது. □

# சிம்பாப்வே-இலங்கை முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு வெற்றி

சிம்பாபவே அணிக்கும் இலங்கை அணிககும் இடையில் நடைபெற்று வந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் சிம்பாப்வே அணியை ஒரு இன்னிங்ஸ் மற்றும் 240ஓட்டங்களால் இலங்கையணி அமோகமாக வெற்றிகொண்டுள்ளது. இந்த டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் இலங்கையணியின் நட்சத்திர சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெற்றுக்களைக் வீழ்த்தி உலக சாதனையை தனதாக்கிக்கொண்டுள்ளார்.

இப் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று முன்தினம் இன்னிங்ஸ தோல்வியைத் தவிர்ப்பதற்கு 342ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரமபித்த சிமாப்வே அணியினா் 102ஓட்டங்களுக்கு தமது சகல விககெற்றுக்களையும் இழந்து ஒரு இன்னிங்ஸ் மற்றும் 240ஓட்டங்கள் வித்தியாசத்திலும் படுதோல்வியைத் தழுவியிருந்தனர். சிம்பாப்வே அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தில் சிறப்பாக எந்த வீரர்களும் பிரகாசிக்கவில்லை. இலங்கை அணி சார்பில் பந்துவீச்சாளர்களான சொய்ஸா 4விககெற்றுக்களையும், முரளிதரன் 2விக்கெற்றுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

இப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் சிம்பாப்வே அணியினா் 199ஓட்டங்களைப் பெற்று தமது சகல விக்கெற்றுக்களையும் இழந்திருந்தனர். துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணிசார்பில் டட்டொண்டாடைபு 40ஓட்டங்களைப் பெற்றுக் கொடுததிருந்தார். பந்து வீச்சில் முரளிதரன் 45ஓட்டங்களுக்கு 6 விக்கெற்றுக்களைக் வீழ்த்தியிருந்தார்.

தமது முதலாவது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கையணியினர் 541ஓட்டங்களைப் பெற்றுக் கொணடனர். இலங்கை அணி சார்பாக சனத் ஜெயசூரியா, மாவன் அத்தப்பத்து ஆகியோர் மிகத் திறைமையாகத் துடுப்பெடுத்தாடியிருந்ததுடன் 1வது விக்கெற்டிற்கு இணைப்பாட்டமாக 281ஓட்டங்களையும் பெற்றிருந்தமை சிறப்பான விடயமாகும்.

மாவன் அத்தப்பத்து 170ஓட்டங்களையும், சனத்ஜெயசூரியா 154ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்திருந்தனர். பந்துவீச்சில் சிம்பாப்வே அணிசார்பில் பணியங்காரா மற்றும் மோ்வியா ஆகியோர் தலா 3விக்கெற்றுக்களைக் வீழ்த்தியிருந்தனர்.

**ஸ்கோர் விபரம்**

சிம்பாப்வே அணி முதல் இன்னிங்ஸில் 199ஓட்டங்கள்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 541ஓட்டங்கள்.

சிம்பாப்வே அணி இரண்டாவது இன்னிங்சில் 102ஓட்டங்கள்.

(ந-68)




BMX என்பவர் குப்பை மேட்டினைக் கடக்கும் போட்டியில் ஈடுபடும் காட்சியைப் படத்தில் காண்கிறீர்கள்.

# இங்கிலாந்தில் டெஸ்ட் தொடரை வெல்வோம்

## லாரா நம்பிக்கை

இங்கிலாந்தில் நடைபெறவிருக்கின்ற டெஸ்ட் தொடரில் தமது அணி வெற்றிபெறும் என்று மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெற் அணித் தலைவர் பிறையன் லாரா தெரிவித்திருககின்றார். ஆயினும் போட்டிகளில் திறமையாக விளையாடி வெற்றிபெறுவோம் என்ற திடமான மனோநிலை தமது வீரர்களிடத்தில் இருக்க வேண்டுமெனவும் பிறையன் லாரா தெரிவித்திருக்கின்றார்.

2000ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற டெஸ்ட் தொடரின்போது மேற்கிந்திய தீவுகள் அணி 3:1என்ற நிலையில் இங்கிலாந்து அணியிடம் தோல்வியடைந்திருந்தது. அதேபோன்று இறுதியாக மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெற் சுற்றப்பயணத்தின் போதும் இங்கிலாந்து அணியிடம் 3-1என்ற நிலையில் மேற்கிந்திய தீவுகள் அணி தோல்வியைத் தழுவியிருக்கின்றது.

இவ்வாறான நிலையில் தமது அணி இங்கிலாற்து அணியை வெற்றிகொள்ள வேண்டுமானால் எமது வீரர்கள் மிக உறுதியான மனோநிலையில் இருக்க வேண்டுமென பிறையன் லாரா சுட்டிக்காட்டியிருக்கின்றார். மேலும் இங்கிலாந்து அணிக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்குமிடையிலான டெஸ்ட் போடடித் தொடர் எதிாவரும் ஜூலை மாதம் 22ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. இத்தொடரில் கலந்து கொள்ளவுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி எதிர்வரும் ஜூலை மாத நடுப்பகுதியில் இங்கிலாந்திற்கு பயணமாவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(யே-68)

# 2003ஆம் ஆண்டு சதுரங்க ஒஸ்கார் விருது விஸ்வநாத்திற்கு

2003ம் ஆண்டின் சதுரங்க போட்டிகளுக்கான ஒஸ்கார் விருதிற்காக இந்தியாவின் தலைசிறந்த சதுரங்க வீரரான விஸ்வநாத் ஆனந் தெரிவாகியிருக்கின்றார்.

1967ஆம் ஆண்டு முதல் நிறுவப்பட்ட இந்த விருதானது, அதன் ஸ்தாபகரான ஜக்ஸ் பியூலின் மறைவுக்குப் பிறகு 1995ஆம் ஆண்டு முதல் ரஷ்யாவில் இருந்து வெளிவரும் பிரபல சதுரங்க இதழ் ஒன்றினால் இவ் விருது வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி கடந்த ஆண்டுக்கான சிறந்த சதுரங்க வீரர் யார், என்பது குறித்து திறந்த வெளி கருத்துக்கணிப்பொன்று நடாத்தப்பட்டது. இதில் 4ஆயிரத்து 150புள்ளிகளைப்பெற்று விஸ்வநாதன் முதலாவது இடத்தைப்பிடித்திருக்கின்றார். எனவே 2003ஆம் ஆண்டுக்கான சிறந்த சதுரங்க வீரருக்கான ஒஸ்கார் விருது எதிர்வரும் யூன் மாதம் ரஷ்யாவின் மொஸ்கோ நகரில வைத்து விஸ்வநாத் ஆனநதிற்கு வழங்கப்படவிருக்கின்றது.

சதுரங்க விளையாட்டை ரசிக்கும் உலகின் ரசிகா்களால் தெரிவு செய்யப்பட்டு சதுரங்கத்திறகான ஒஸ்கார் விருதினைப்பெறப்போவதை மிகுந்த பாக்கியமாகவும், கௌரவமாகவும் தான் கருதுவதாக விஸ்வநாத் ஆனத் கூறியிருக்கின்றார்.

(யே-58)

# முத்தையா முரளிதரனுக்கு ஜனாதிபதி, பிரதமர் வாழ்த்து

அனைத்து இலங்கையர்களையும் போன்றே தானும முரளிதரனின் சாதனைகுறித்து மகிழ்ச்சி அடைவதாக ஜனாதிபதி சந்திரிகா குமராதுங்க தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்கும் இலங்கை அணிககும் இடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெற்றுக்களை வீழ்த்தி உலக சாதனை படைத்த இலங்கை அணியின் நட்சத்திர சுழல பந்து வீச்சாளா முத்தையா முரளிதரனுக்கு ஜனாதிபதி அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர் என்ற ரீதியில் முத்தையா, முரளிதரனுக்கு தடைகளைத் தாண்டும் வல்லமை இருந்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி அவரின் இத்தகைய சாதனைகள் மேலும் தொடர வேண்டும் எனவும் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளாா.

இதேவேளை, முத்தையா முரளிதரனின் உலக சாதனையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் பாராட்டியுள்ளார்.

கிரிக்கெற் உலகில் பந்து வீச்சாளா ஒருவர் தரக்கூடிய உயர்ந்த இடத்தை தற்போது முத்தையா முரளிதரன் பெற்றுள்ளார்.

அவரது இத்தகைய சாதனைகள் தொடர தான் தொடர்ந்து உதவப் போவதாகவும் பிரதமர் விடுத்த வாழ்த்துச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ந-61,10)

# விளையாட்டுச் செய்திகள்



பயிற்சிக் காலத்தில் க்லொடி தனது காவல் ஜோலுடன் தமாஷாகப் பேசுவதைப் படத்தில் காணலாம்.

# சேர் பனிஸ்டர் கௌரவிப்பு

ஒரு மைல் தூரத்தை 1500(மீற்றர்) முதன் முதலில்4 நிமிடங்களுக்குள் கடந்து 1954இல் சாதனை புரிந்த பிரிட்டனின் சேர் பனிஸ்டரைக் கௌரவிக்கும் முகாமாக அதே ஒகஸ்வோா்ட் பல்கலைக் கழகத்தின் இ.்.பிலி றோட் மைதானத்தில் ஞாபகப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது.

1954இல் சேர் பனிஸ்டர் போட்டியிட்ட போது பாவிக்கப்பட்ட அதே ஆரம்ப மணியே இப் போட்டியிலும் இராண்டாமிடம் பெற்ற ஜோன் லாண்டியும் உடனித்தார்.

சேர் பனிஸ்டரால் மீண்டும் அதே நேரத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்ட இப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் கிறெய்க் மோட்டம் 56:64 விநாடிகளில் இத் தூரத்தைக் கடந்து புதிய சாதனையை ஏற்படுத்தினார்.

75 வயதான சேர் பனிஸ்ரர் வெற்றி பெற்றவர்களுக்கு ஞாபகப் பரிசுகளையும் கல்வியில் சாதனை புரித்தவர்களுக்கும் பரிசுகளையும் வழங்கினார். (யே)




பயிற்சிக்காக பசிலோனாவில் காத்திருக்கும் ஜென்ஷன் பட்டின்.

# மேசைப்பந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணிகள் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணமட்ட மேசைப்பந்தாட்டப் போட்டிகளில் ஆண்கள், மற்றும் பெண்கள் இரு பிரிவிலும் யாழ்.மாவட்ட அணியினர் சம்பியன் பட்டங்களைச் சுவீகரித்துக்கொண்டனர். வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத்திணைக் களத்தினால் யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ.உள்ளரங்கில் நேற்று முனதினம் நடைபெற்ற இந்த சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்ட பெண்கள் அணியினர் திருகோணமலை மாவட்ட பெண்கள் அணியை 3:2 எனற பெறுபேற்றிற்கமைய வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியிருந்தனர்.

யாழ்.மாவட்ட ஆண்கள் அணியினர் தம்மை எதிர்த்துவிளையாடிய மட்டக்களப்பு மாவட்ட அணியினரை 3:0என்ற பெறுபேற்றிற்கமைய வெற்றிகொண்டு சம்பியன் பட்டத்தினை தமதாக்கினர்.

சென்ற ஆண்டு வவுனியாவில் நடைபெற்றிருந்த இந்த மாகாண மட்டமேசைப்பந்தாட்டப் போட்டிகளிலும் யாழ்.மாவட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் அணியினர் சம்பியன் பட்டங்களை வென்றெடுத்திருநதனர். இதில் குறிப்பாக யாழ் மாவட்ட பெண்கள் மேசைப்பந்தாட்ட அணியினர் தொடர்ச்சியாக நான்கு வருடங்களாகவும், யாழ்.மாவட்ட ஆண்கள் மேசைப்பந்தாட்ட அணியினர் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களாகவும சம்பியன் பட்டஙகளை மாகாணமட்ட போட்டிகளில் பெற்று வருவதும் இங்கு குறிபபிடப்படவேண்டிய விடயமாகும். நேற்று முன்தினம் வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கான பரிசிலகளை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளா பாப்பா யாழ்மத்திய கல்லூரி அதிபர் இ.இராசதுரை ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றோகன் இராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்விறகு வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்கள உதவிப்பணிபபாளர் ஜே.டபிள்ஸ் விமலராஜன் வருகைதந்திருந்தார்.

(ந-68)

# வியத்தகு வியட்நாமும் சுதந்திரமும்

இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கடந்த வெள்ளிக்கிழமை ஐரோப்பிய காலனித்துவ வல்லரசுகளின் ஒன்றான பிரான்ஸை வெளியேற்றிய 50வது வருட பூர்த்தியினை வியட்நாம் கொண்டாடியது.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் சுமார் 15,000 வியட்நாமியப் பிரஜைகள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

இராணுவ அணிவகுப்புகளும், வினோத வேடிக்கைகளும் நடைபெற்ற டியன்பியன் சதுக்கத்தில் வெளிறிப் போன இராணுவச் சீருடையில் நின்ற வயோதிப வீரர்களின் கண்களிலெல்லாம் கண்ணீர்.



1954 மே 7ஆம் திகதி கம்யூனிஸ்ட் இயக்கத் தலைவர் கோ ச்சி மினின் தளபதி, ஜெனரல் வோ கயன் கியாப் தலைமையில், டியன் பியன் பள்ளத்தாக்கில் அமைந்திருந்த பிரதான பிரெஞ்சுத் தளத்தில் வியட்நாமிய படைகள் 56 நாளாகவும் முற்றுகையைத் தொடர்ந்த போது, கிழிந்த ஆடைகளும், கலைந்த கோலங்களுடனும் டியன் பியன் மலைகளைவிடப் பலமான மன உறுதியோடும் காத்திருந்த வியட்நாமியப் படைகளிடம் பிரெஞ்சுத் தளபதி கிறிஸ்டியன் காஸ்ட்றி குனிந்த தலையோடு சரணடைந்தார்.

10,683 வீரர்களோடு கெரில்லாப் பாணியில் தாக்குதலைத் தொடங்கிய வியட்நாமியத் தளபதி வோ, தனது தாக்குதலை வெற்றிகரமாக முடித்துக் கொண்டபோது அவரிடம் எஞ்சியிருந்த வீரர்களின் எண்ணிக்கை 3,290 தான்.

வியட்நாமியரைவிட ஆட்பலத்திலும், நவீன ஆயுதப் பலத்திலும் வல்லமையோடு விளங்கிய பிரான்சின் வீழ்ச்சி முழு உலகுக்குமே ஒரு பாடத்தை உணர்த்தியது.

“பற்கள் விழுந்து, நகங்கள் கழன்று போனாலும், சிங்கத்திற்குச் சீற்றம் போகாது” என்பார்கள். வயது 94 ஆகிவிட்டபோதும், இந்த மாபெரும வெற்றியின் சிற்பி என வர்ணிக்கப்படும் ஜெனரல் வோ கயன் கியாப் அந்தச் செய்தியை தன் வாயாலேயே இந்தத் தள்ளாத வயதிலும் கர்ஜனையோடு வெளியிட்டுள்ளார்.

“ஒரு நாடு எவ்வளவு நவீனரக ஆயுதங்களையும் வைத்திருக்கலாம். எவ்வளவு பணத்தையும், படையணிகளையும் வைத்திருக்கலாம். ஆனால், இன்னொரு நாட்டை ஆக்கிரமிக்கும் உரிமை அதற்குக் கிடையாது. இந்தத் தார்மீக உண்மையை மறந்துபோகும் எந்த ஒரு வல்லரசும் தோற்கடிக்கப்படும் என்றார் வோ.

1975ஆம் ஆண்டு மாபெரும் வல்லரசான அமெரிக்கா வைத தமது நாட்டைவிட்டு வியட்நாமியர் விரட்டியடித்தபொழுது இரண்டாவது தடவையாகவும் அவர்கள் இந்த உண்மையை உலகுக்கு அடித்துச் சொன்னார்கள்.

1954இல் பிரான்ஸ் வெளியேற்றப்பட்டதும் அமெரிக்கா வியட்நாமில் நுழைந்தது. இது வியட்நாமை வடக்கு, தெற்கு என இரண்டாகப் பிரிவடையைச் செய்தது.

வியட்நாமில் கம்யூனிஸம் வெற்றி பெற்றது, தென் கிழக்குக்காசிய நாடுகளிலும் அது வேகமாகப் பரவி ஜப்பான், அவுஸ்திரேலியா வரை செல்லக்கூடும் என்று அஞ்சியே அமெரிக்கா இங்கு மூக்கை நுழைத்தது.

சுமார் ஒரு மில்லியன் ரோமன் கத்தோலிக்கர் வட வியட்நாமிலிருந்து புதிதாகப் பிரிக்கப்பட்ட தென்வியட்நாமிற்கு இராணுவ விமானங்கள் மூலம் இரவோடு இரவாக கொண்டு செல்லப்பட்டனர். அமெரிக்கா, வியட்நாமிய மற்றும் பிரெஞ்சு இராணுவ விமானங்கள் இந்த மாபெரும் இடம்பெயர்வில் பங்கெடுத்தன.

இரண்டாம் உலகப் போரின் போது டங்கேர்க் இராணுவத் தளத்தை விட்டுப் பல்லாயிரக் கணக்கான நேச தேசப்படைகள் விமானங்கள் மூலம் மீட்கப்பட்ட சம்பவத்தை இது பெரிதும் நினைவுபடுத்தியது. ஏறத்தாள ஒருவருக்கு மேல் ஒருவர் மூடைகள் அடுக்கப்பட்டது போல் அடுக்கப்பட்டு, விமானங்கள் புறப்பட்டுச் சென்றன.

20ஆம் நூற்றாண்டின் வியத்தகு விடயம் என்னவென்று நினைக்கிறீர்கள் என்று அமெரிக்க ஜனாதிபதியாக விளங்கிய ரொனால்ட் றேகனை 1980களில் பி.பி.சியின் நிருபர், பேட்டியொன்றின்போது கேட்டார். அதற்கு றேகன் அமெரிக்கர்கள் தான் உலக நவீனத்துவத்தின் முன்னோடிகள். சந்திரனில் நீல் ஆம்ஸ்ரோங் காலடி வைத்த போது அமெரிக்காவின் மாபெரும் சக்தியை இந்த 20ஆம் நூற்றாண்டில் உலகம் உணர்ந்து கொண்டது என்றார்.

றேகனின் இந்தக் கருத்துக்குப் பதிலளித்த, 1992 வரையும் உலகின் மற்றொரு மாபெரும் வல்லரசாக விளங்கிய சோவியத் யூனியனின் நீண்டநாள் வெளிவிவகார அமைச்சர் யூரி அந்திரப் போவ் பின்வருமாறு கூறினார்.



“உலகின் மாபெரும் சக்தியான அந்த அமெரிக்காவை மிகச் சிறிய வியட்நாமியர் ஓட ஓட விரட்டியதை விடவும் வியத்தகு விடயம் இருபதாம் நூற்றாண்டில் இருக்க முடியுமா? என்று கேட்டார்.

உண்மையில் 1941இல் 2ஆம் உலகப் போர் முடிவடைவதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னதாகப் பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்ரன்ற் சேர்ச்சிலுடன் அமெரிக்க ஜனாதிபதி தியடோர் றூஸ் வெல்ற் அத்திலாந்திக் சார்ட்டரில் கையெழுத்திட்டார். அதன்படி குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்குவது என்பது உறுதிப்படுத்தப்பட்டபோதும் 1945இல் உலகப் போரை முடித்துவைத்து, அணுவாயுதத்துடன் அமெரிக்கா வல்லரசு அந்தஸ்தைப் பெற்றபோது, மீண்டும் பிரெஞ்சுக்காரர்கள் இந்தோச் சீனாவில், வியட்நாமுக்குள் நுழைய அமெரிக்கா அனுமதி அளித்தது. அமெரிக்க ஜனாதிபதி ஹரிட்ருமன் அதற்கு அனுமதி வழங்கினார்.



1954இல் டியன் பியனை வியட்நாமியர் தாக்கியபொழுது, பிரான்சுக்கு உதவுவதா? விடுவதா? என்பதில் அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் பாரிய மெய்மை முரண்பாடுகளுக்குள் அகப்பட்டிருந்தார்.

சோவியத் ரஷ்யாவுடனான பனிப்போரில் அகப்பட்டிருந்த ஐசனோவர் வியட்நாமில் அமெரிக்கத் தலையீடு சோவியத் ரஷ்யாவை வம்புக்கிழுக்கும் என்று பயந்தார். அதன் தொடர்ச்சியாகத் தென்கிழக்காசியா கம்யூனிஸ்ட் வரையில் விழலாம் என்று பேசாமல் இருந்துவிட்டார்.

1982இல் வெளியிடப்பட்ட அமெரிக்க அரசின் ஆவணங்கள் இதனை உறுதிப்படுத்தின. 1950களில் அமெரிக்கக் கூட்டுப்படைகளின் தலைவராக விருந்த ஆதர் ரட்போர்ட் மிகச் சிறியளவிலான ஓரிரு அணுக்குண்டுகளை வியட்நாமில் வீசுமாறு ஆலோசனையும் வழங்கியிருந்தார்.

பிரிட்டன் படைகளும், மீட்பு நடவடிக்கைகளுக்கு மறுத்துவிட்டதால், ஐசனோவர் இந்த ஆலோசனைகளை மறுத்துவிட்டார். அப்பொழுது தான் கொரிய யுத்தத்தில் அமெரிக்கா சில பாடங்களைட் படித்துக் காயம் ஆறாத நிலையிலிருந்தது. இருப்பினும் தென்கிழக்காசியா கம்யூனிஸத்தில் விழலாம் என்ற எச்சரிக்கையும் ஐசனோவரால் விடப்பட்டது. “ஆக்கிரமிப்பில் வீழுதல்” எனும் அவரது மிகப்

**பேதுரு யேசுதாசன்**

பிரபலமான கொள்கை விளக்கப்பேச்சு இன்றும் வியட்நாமிய ஆக்கிரமிப்பு ஆதரவாளர்களால் மீட்டிப் பார்க்கப்படுகிறது.

1962ல் வியட்நாமிற்கான இராணுவ ஆலோசகர் தொகையை மிகப்பிரபலமான அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி 900த்திலிருந்து 11,000மாக உயர்த்தினார். கெனடி கொலை செய்யப்பட்ட பின்னர், ஆட்சி பீடமேறிய ஜனாதிபதி ஜோன்சன் வியட்நாம் யுத்தத்தைத் தீவிரப்படுத்தினார். 1975இல் வியட்நாமியரின் வீரத்தீரச் செயல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் பெருந்தொகையான அமெரிக்கர்கள் வியட்நாமில் மடிந்து விழுந்தபொழுது அமெரிக்க மக்கள் வீதியில் இறங்கினர்.



எங்களுடைய பிள்ளைகளை வியட்நாமில் வீணாகக் கொல்லாதே வியட்நாமில் இருந்து வெளியேறி வா என்று பாரிய ஆர்ப்பாட்டங்களில் இறங்கிய பொழுது அமெரிக்க வரலாற்றின் சரித்திர ஏடுகளில் அமெரிக்காவின் தோல்வி எழுதப்பட்டது. ஜனாதிபதி நிக்ஸன் பதவி துறந்தார். இரண்டு மில்லியன் வியட்நாமியர் (இராணுவமும் பொது மக்களும்) உட்பட 55,000த்திற்கு அதிகமான அமெரிக்கப் படைகள் இந்த யுத்தத்தில் உயிரிழந்தனர்.

பிரான்சில் இரண்டு தினங்களுக்கு முன்பு நடந்த நினைவு நிகழ்ச்சியில் உரையாற்றிய ஜனாதிபதி ஜக் ஷிராக் வீரபுருஷர்களாக மரணித்த பிரெஞ்சு வீரர்களுக்கு மரியாதை செய்த அதேவேளை, “உங்களுடைய வீரத்திற்கு எவ்வகையிலும் பின்னிலை இல்லாத வீரர்களால் நீங்கள் வீழ்த்தப்பட்டீர்கள்” என்று வியட்நாமியரின் வீரத்தை மதித்தார்.

1970களின் பிற்பகுதியிலும் 80களின் ஆரம்பத்திலும் MISSING IN ACTION MISSION IMPOSSIBLE போன்ற உலக பிரசித்தி பெற்ற சினிமாத திரைப்படங்களை வெளியிட்ட அமெரிக்கர்கள் வியடநாமில் தாம் அடைந்த தோல்விக்கும் ஆற்றாமைக்கும வடிகால் தேடிக்கொண்டனர்.

ஆயினும் சுதந்திரத்தின் பெறுமதி உணர்ந்தவர்களுக்கும் மற்றவர்களின் உரிமையை மதிப்பவர்களுக்கும் வீர வியட்நாமியரின் ஓயாத போராட்ட வாழ்வு சிறந்த பாடங்களைக் கற்றுத் தருகிறது. கோ ச்சி மினின் கருத்துப்படி அவர்கள் அடைந்த வரலாற்றுப் பெருமைமிகு வெற்றி “ஒரு வரலாற்றைப் பெருமைமிகு மைல் கல்லாகும்.”

கோ ச்சி மினின் தளபதி வோ கியாப்பின் கருத்துப்படி “சுதந்திரத்தைவிடப் பெறுமதியானது எதுவுமில்லை” என்பதை வியட்நாமியர் உலகுக்கு உணர்த்தி நிற்கின்றனர்.

பல இழப்புக்கள் மத்தியிலும் வியட்நாம் இன்றும் ஒரு கம்யூனிஸ்ட் நாடாக விளங்குகிறது. 1990இல் இது பொருளாதார சீர்திருத்தங்களை ஆரம்பித்தது. 1994இல் ஜனாதிபதி கிளின்டன் வியட்நாம் மீதான தடையை நீக்கினார். 1995இல் அமெரிக்காவுடன் வியட்நாம் இராஜதந்திர உறவுகளை ஆரம்பித்தது. அதே வருடம் “ஆசியான்” கூட்டமைப்பில் அங்கத்துவமும் பெற்றது.

## இன்று ஒரு தகவல்

# சிறியோர் உதவி

ஒரு காட்டிலே வாழ்ந்த மிருகங்கள், ஜீவராசிகள் எல்லாவற்றையும் அக்காட்டில் வசித்த காட்டு இராசவான சிங்கம அளவற்ற கொடுமைகள் செய்து பயமுறுத்தி அடிமைப்படுத்தி வந்தது.

எல்லை மீறிய சிங்கத்தின் கொடுமைகளால் மற்றைய காட்டு ஜீவராசிகள் ஒற்றுமைப்பட்டன.

ஒருநாள் யாவும் ஒன்று கூடிச் சிங்கத்துடன் போரிடத் திட்டமிட்டன. அதற்காகக் காட்டில் வாழும் ஜீவராசிகளையெல்லாம் அணிதிரட்டின. இதைக் கண்ட எறும்புகளும் தாமும் அப்படையில் சேரச் சென்றன.

எறும்புகளைக் கண்ட யானை, புலி மற்றைய மிருகங்கள் எல்லாம் "சின்னஞ்சிறுசுகளே! நீங்கள் இதிற் சேரவேண்டாம்'' என்றன. ஆனாற் சிற்றெறும்புகளோ "நாங்களும் சேரவேண்டும் என அடம்பிடித்தன. ஆயினும் மற்றைய ஜீவராசிகள் இவற்றைத் துரத்திவிட்டன.

எறும்புகளோ ரோசத்துடன் தங்களுக்கும் காலம் வரும் எனத் திரும்பிச் சென்றன. சில நாட்களில் காட்டு இராசவான சிங்கத்துக்கும், காட்டு ஜீவராசிகளுக்கும் இடையே கடும் சண்டை நடந்தது. சிங்கம் வீராவேசத்துடன் கர்ச்சித்தது தன்னுடன் போரிட்டவற்றையெல்லாம் கொன்றொழிக்க, யானையும், புலியும் மட்டும் தனித்து நின்று சண்டையிட்டன.

இந்த இக்கட்டான நிலையைக் கண்ட சிற்றெறும்புகள் இதுதான் நல்ல தருணம் என எண்ணி மெல்ல ஊர்ந்து சென்று சிங்கத்தின் காதுக்குள் நுழைந்து கொண்டன.

சிங்கத்தின் காதினுள் எறும்புகள் நுழைந்ததும் சிங்கம் தரையிற் கிடந்து புரளத் தொடங்கியதும் வேகமாகப் போரிட்டுக் கொண்டிருந்த யானையும், புலியும் காரணம் தெரியாமற் திகைத்தன. தரையிற் புரளத் தொடங்கிய சிங்கம் சிறிது நேரத்திற் கால்களை அடித்தபடி பயங்கர மான கூச்சலுடன் இறந்தது.

சிங்கத்தின் பக்கத்திற்குச் சென்ற யானையும், புலியும் ஆச்சரியத்துடன் சிங்கத்தை உற்றுநோக்கின. அப்பொழுது சிங்கத்தின் காதுகளிலிருந்து எறும்புகள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வெளியே வந்தன. யானையும்,புலியும் முன்னே நிற்பதைக் கண்ட எறும்புகள் "நாங்கள் சின்னஞ் சிறுசுகள் என்று விரட்டி விட்டீர்கள். நாங்கள் கோபிக்கவில்லை எங்களுக்கும் காலம் வரும். சந்தர்ப்பம் வரும். அப்பொழுது எங்கள் திறமையை வெளிப்படுத்துவோம் என்று பொறுமையுடன் இருந்தோம்.

இன்று உரியநேரம் வந்தது. எங்கள் திறமையாற் பெரிய சாதனையே படைத்துவிட்டோம்.இனிமேல் நாங்கள் ஒன்றாகப் பயமின்றிச் சுதந்திரமாக வாழ்வோம் என்று யானையுடனும்,புலியுடனும் அணி நடைபோட்டுச் சென்றன. "சிறு துரும்பு ஆபத்திற்கு உதவும்" என்பது ஆன்றோர் வாக்கு.

நீர்வை மணி

# முல்லைத்தீவுக் கடற்கரையில் வெளிச்சவீடு ஒன்றை அமைக்குக

## செல்வம் எம்.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்சவீடு ஒன்று அமைத்துத்தர வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுமார் 70 கிலோமீற்றர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் 17ஆயிரத்து 522 கடற்றொழிலாளர்கள் வாழ்கின்றனர்.

இவர்கள் 109 கண்ணாடி இளைப்படகுகள், 54 இயந்திரப்படகுகள், 89தெப்பங்கள், 20 இயந்திரம் பொருத்திய கட்டுமரங்கள் மற்றும் கட்டுமரங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி ஆழ்கடல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனினும், மேற்படி கடற்பரப்பில் மீன் பிடிக்கச் செல்வோர் தமது கடற்கரையை துல்லியமாக இனங்காணக் கூடியவாறு வெளிச்சவீடு இல்லாமையால் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் கடற்றொழிலாளர்கள் கரை சேருவதில் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனை கருத்திலகொண்டு இப்பகுதிக் கடற்கரையில் வெளிச்சவீடு ஒன்றை அமைப்பதன் மூலம் கடந்தகால யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட முல்லை மாவட்ட கடற்றொழிலாளர்களுக்கு உதவ முன்வரவேண்டும் என சுட்டிக்காட்டியே நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதன் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கடிதம் ஒன்றையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு அவர் அனுப்பி வைத்துள்ளார். இதேவேளை, மேற்படி கடற்கரையில் ஏறகனவே அமைக்கப்பட்டிருந்த வெளிச்சவீடு கடந்தகால யுத்த அனர்த்தங்களால் உடைந்து போயுள்ளமை அறிந்ததே. (ந-4)

# ஐக்கிய தேசிய முன்னணியின் கட்டமைப்பு இன்று வெளியிடப்படும்

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலில் தோல்வியைத் தழுவிய ஐக்கிய தேசிய முன்னணி தனது கட்சியை மீளக்கட்டியெழுப்பும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இதன்படி இன்று தனது புதிய கட்சி கட்டமைப்பையும் புதிய அதிகாரிகளின் பெயர்களையும் வெளியிடவுள்ளது

கட்சியின் தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர் ஆகிய பதவிகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. கட்சியின் பலவீனங்களை நீக்குவதுடன் கட்சியைத் திருத்தியமைக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் அண்மையில் கோரியிருந்தனர்.

வேலைவாய்ப்பு வழங்குதல், பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குதல், கட்சியினை பிரபல்யப்படுத்தத் தவறியமை, கட்சி கடந்த இரண்டு வருடங்களில் செய்த சாதனைகளை மக்களுக்கு முறையாக அறிவிக்காமை என்பனவே கடந்தபொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்விக்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, தேசிய அமைப்பாளர் பதவியைத் தவிர வேறு எந்தப்பதவிகளையும் ஏற்கமாட்டேன் என எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளனர்.

இது ஒரு புறமிருக்க ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைப்பீடம் கட்சியின் தவிசாளராக மலிக் சமரவிக்கிரமவைத் தொடர்ந்தும் வைத்திருப்பது எனத் தீர்மானித்துள்ளது.

மலிக் சமரவிக்கிரமவை தவிசாளர் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என பரந்த அளவில் விடுத்த கோரிக்கைக்கு மத்தியிலும், அவர் தொடர்ந்தும் அப்பதவியில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது விவசாயப் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக்கட்சி பெருமளவில் பின்னடைவை எதிர்நோக்கியதற்கான காரணங்களையும் கட்சியின் தலைமைப்பீடம் ஆராய இருக்கின்றது என தெரியவருகிறது. எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பதாக கட்சியைப் புனரமைத்து மேலும பலப்படுத்துவது என தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது . (ந-6,121)

## இராசி பலன்

**10.05.2004**

**(சித்திரை 28, திங்கட்கிழமை)**

**சஷ்டி பிற்பகல் 12.41 மணிவரை**

**உத்தராடம் பிற்பகல் 4.03 மணிவரை**

**இராகுகாலம் 7.24-8.54 மணிவரை**

**சுபநேரம் 11.54-1.24 மணிவரை**

**மேடம்**
தொழல் நன்மை, காரிய அனுகூலம், அதிகாரம், நல்லசெய்தி.

**இடபம்**
மனச்சஞ்சலம், காரியதாமதம், கட்டுப் பாடு, பித்தரோகம்.

**மிதுனம்**
உறவனர் வெறுப்பு ,திடீர்நன்மை, தொழிலில் மந்தநிலை, வாகனபயம்.

**கடகம்**
எடுத்தகாரியம், கைகூடும், புத்தி சாதுரி யம், விருந்துபசாரம், ஆரோக்கியம்.

**சிங்கம்**
சத்துருஜெயம், உடல்நலம், ஜனவ சியம், சந்தோசமான சம்பவம்.

**கன்னி**
மனச்சோர்வு, வியாபார விருத்தி, சிறுவியாதி, பொருள் விரயம்.

**துலாம்**
உறவினர் சந்திப்பு, காரியதாமதம், வாகன சுகம், உடல் நலக்குறைவு,

**விருச்சிகம்**
பிரயாணநன்மை, நல்லமுயற்சி, சகோதரா உதவி, நல்ல வருமானம்.

**தனுசு**
பித்தரோகம், அதிகசெலவு, முயற்சிதாமதம், வீண்விவாதம்.

**மகரம்**
பிறருககு உதவுதல், சுவாரஸ்யம், அமைதியான நிலை, காரிய சித்தி.

**கும்பம்**
சயனசுகக் குறைவு, முயற்சி தாமதம், சுப செலவு, பிரயாணம்.

**மீனம்**
காரிய சித்தி, நண்பர்கள் சந்திப்பு, தனவரவு, பெருமையடைதல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## கூரைத்தகடு விநியோகம்

# முறைகேட்டை ஆராய மூவர் கொண்ட குழு நியமனம்

(புத்தளம்)

இந்திய அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட கூரைத்தகடுகளை விநியோகித்த விதம் குறித்து ஆராய மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கூரைத்தகடுகள் விநியோகத்தில் முறைகேடுகள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளையடுத்து அது குறித்த விசாரணைகளை மேற்கொள்ள வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப் இந்தக் குழுவை நியமித்துள்ளார்.

கிராம மற்றும் தோட்டப்புறங்களில் வாழும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்க இந்திய அரசாங்கத்தினால் கடனுதவி அடிப்படையில் இந்தக் கூரைத்தகடுகள் வழங்கப்பட்டன.

இக் கூரைத்தகடுகளுக்காக 20 வருடகாலத்தில் 2ஆயிரத்து 126 மில்லியன் ரூபாவை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளமை இங்கு குறிபபிடத்தக்கது. (ந-61,10)

# 30 வீதமான சிறார்கள் முன்பள்ளி செல்வதில்லை

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் 30 வீதமான சிறார்கள் முன்பள்ளிகளுக்குச் செல்வதில்லை என கோப்பாய் சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பு நடத்திய ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவர் த.விசாகரூபன் இது பற்றிக் கருத்துக் கூறுகையில்,

பெற்றோர் மத்தியில் உள்ள விளங்காத் தன்மை, விழிப்புணர்வின்மை ஆகியனவே சிறார்கள் முன்பள்ளிக்கு அனுப்பப்படாமைக்கான காரணமாகும்.

இங்கு சுமார் 600முன்பள்ளி ஆசிரியர்கள் ஊதியம் எதுவுமின்றி கற்பித்தலில் ஈடுபட்டுள்ளனர்.அத்துடன், 15 ஆயிரத்து 509பேர் முன்பள்ளிகளில் இணைந்துள்ளனர் எனத் தெரிவித்தார். (உ-43)

# 20வீதமான இலங்கைச் சிறுவர்கள் பாலியல் இம்சைக்கு ஆளாகின்றனர்

## ஐ.நா.சிறுவர் நிதியம் கருத்து

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சிறுவர்களில் 20 சதவீதமானவர்கள் மீது உடல் மற்றும் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்கள் இடம்பெற்று வருவதாக ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டெட்சைபான் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொலிஸ் திணைக்களத்தின் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவின் பணிகளை மேம்படுத்துவதற்காக சுமார் 7கோடி ரூபா நிதியினை ஐக்கிய நாடுகள சிறுவர் நிதியம் அண்மையில் வழங்கியது. இதற்கான உபகரணங்கள் பகிர்ந்தளிப்பு வைபவம், கடந்த வியாழக்கிழமை பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற போதே அந்நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி இதனைச் சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், இலங்கையில் பெண்களும் சிறுவர்களும் உடல் மற்றும் பாலியல் ரீதியில் பரவலாகத் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இதனைத தடுப்பதற்கு பொலிஸார் தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இங்கு பொலிஸார் அவர்களைப் பாதுகாக்க மேற்கொண்டு வரும் நடவடிககைகள் பாராட்டத்தக்கவையாக இருப்பினும், அவர்களின் சேவைகளுக்கான உரிய வசதிகள் போதுமானவையாக இல்லை.


பொலிஸ் பிரிவுகளில் வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும். சிறுவர்களைச் சிறுவர்களாகவே மதித்து நடாத்த வேண்டும்அப்போதுதான் சிறுவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் தடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

(உ-18)

# அன்று சோனியாவை ஆதரித்த
# ஜெயா இன்று எதிர்ப்பது ஏன்?
# கலைஞர் கருணாநிதி கிண்டல்

(சென்னை)

சோனியாவை ஆதரித்த ஜெயலலிதா, இன்று எதிர்ப்பது ஏன்? என்று தி.மு.க தலைவர் கருணாநிதி கேள்வி தொடுத்துள்ளார்.



சிவகங்கை மாவட்டத்தில் நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் பேசும் போதே கலைஞர் கருணாநிதி மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

என் எதிரே உள்ள மைதானம் 15 ஏக்கர் பரப்புள்ளது. இப் போது இந்த மைதானமே நிரம்பி வழிகிறது என்று என்னிடம் மாவட்ட செயலாளர் பெரிய கருப்பன் பெருமைப்பட்டுக் கொண்டார்.காயல்பட்டினத்தில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் கூட்டம் நிரம்பி வழிந்தது. இன்றைக்கு இங்கேயும் நிரம்பி வழிகிறது.

40 இடங்களில் நமது வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டு உள்ளனர். நமது அணி உருவான நாள் முதலே தொடர்ந்து சொல்லியிருக்கிறேன். தமிழகத்தில் எனது தலைமையிலே இந்த அணி இருந்தாலும் அகில இந்திய அளவிலே சோனியா தான் பிரதமராக வரவேண்டும் என்பது எனது கருத்து.

நான் சொல்லியதை கேடட உடனேயே அனல் போல கொதித்து, ஆத்திரப் பட்டு, சுடு சொல்லால், சோனியா அன்னிய நாட்டுக்காரர். என ஜெயலலிதா கூறிவருகிறார். நாட்டின் பிரதமராக யார் வரவேண்டும்? அரசியல் அனுபவமிக்கவர் வரவேண்டுமா? அரைவேக்காடு வர வேண்டுமா? ஆற்றல் மிக்கவர் வர வேண்டுமா? கத்துக்குட்டி வர வேண்டுமா? என திரும்ப திரும்ப அவர் பேசி வருகிறார்.

1999ம் ஆண்டு இதே ஜெயலலிதா புதுடில்லி விமான நிலையம் சென்று இறங்கினார். விமான நிலையத்தின் வெளியே நிருபர்கள் அவரை சூழ்ந்து, பேட்டி கண்டனர். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட முதல் கேள்வி, புதுடில்லி வந்துள்ளீர் களே சோனியாவை சந்தித்து பேசுவீர்களா? என்பதுதான். அதற்கு பதில் அளித்த ஜெயல லிதா,

எனது பயணத்தின் நோக்கமே சோனியாவை சந்திப்பது தான். நிச்சயமாக சந்தித்து பேசுவேன் என்றார்.

கடந்த மாதம் 17 திகதியன்று புதுடல்லியில் பேட்டியளித்த போது, வாஜ்பாய் அரசு கவிழ்ந்து காங்கிரஸ் ஆட்சி அமையவேண்டும் எனறார். அதன்பின் 20.4.99 பேட்டியன் போது, சோனியா பிரதமரானால், ஆதரவு அளிப்பீர்களா? என்ற கேள்விக்கு, அவர் அளித்த பதில், ஆதரவு தருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதுதான். அன்றைக்கு அப்படி சொல்லியவர் இன்றைக்கு சோனியாவை அன்னிய நாட்டுக்காரர், அரசியல் அரைவேகாடு, கத்துக்குட்டி என்று கூறுகிறார் என்றால், இதை விட நாட்டுக்கு கேடு எதுவும் உண்டா?

1999ல் சோனியாவை ஆத ரித்த ஜெயலலிதா இன்று அவரை எதிர்க்க என்ன காரணம்? என்றும் கலைஞர் கேள்வி எழுப்பினார். (து)



இனிப்புக்களைப் பரிமாறிக் கொள்கின்ற புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய இராணுவ செவிலியர் பிரிவு அதிகாரிகள்

# 1000 ஆண்டாக சோழ அரசிக்கு
# பிறந்த நாள் கொண்டாடும் மக்கள்

(தஞ்சாவூர்)

சோழ அரசி செம்பியன் மாதேவிக்கு 1000ஆண்டுகளுக்கு மேலாக பிறந்த நாள் கொண்டாடி வருகின்றனர் ஒரு கிராம மக்கள். இவ் விழா கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது.

தஞ்சாவூரை ஆண்ட சோழப் பேரரசன் ராஜராஜ சோழனின் பாட்டி செம்பியன் மாதேவி. இவரது கணவன் கண்டராதித்த சோழன்.

10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செம்பியன் மாதேவி சித்திரை மாதம் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர். இவரது பெயரில் அமைந்த நாகை மாவட்டம் செம்பியன் மாதேவி என்ற ஊரில் இவரது பிறந்த தினவிழா ஆண்டு தோறும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

செம்பியன் மாதேவியால் கட்டப்பட்ட ஸ்ரீகைலாசநாதர் கோயிலில் ஆயிரம் ஆண்டுகளாக இவ் விழா கொண்டாடப்படுகிறது. இங்குள்ள சோழர்கால கல்வெட்டுக்கள் சித்திரைக் கேட்டை விழா எவ்வளவு சிறப்பாக அந்நாளில் கொண்டாடப்பட்டது என்பதை விபரிக்கின்றன. என்கின்றார் தொல்லியல் ஆய்வாளர் முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன்.

இக் கோயிலில் முதலாம் ராஜேந்திர சோழனால் அமைக்கப்பட்ட செம்பியன் மாதேவி உருவச் சிலைக்கு சித்திரை கேட்டை நட்சத்திர நாளில அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. சந்தனக் காப்பு அலங்காரமும் செய்யப்படுகிறது.

விழாதினத்தன்று பட்டுப் புடவை, பழங்கள் ,இனிப்புக்கள் ஆகிய வறறைத் தட்டுக்களில் வைத்து வீதி உலாச் சென்று செம்பியன் மாதேவி சிலைக்கு பட்டுப்புடவை சாத்துகின்றனர்.

விழா நாள் இரவு செம்பியன் மாதேவியின் ஐம்பொன் விக்கிரகம் அலங்கரிக்கப்பட்டு வாண வெடிக்கையுடன் வீதியுலா நடைபெறுகின்றது. சோழர் கால அரசி ஒருவரின் பிறந்த நாள் விழாவை ஊரார் 1000 ஆண்டுகளுக்கும் மேலாகக் கொண்டாடிவருவது, தமிழகத்தின் வேறுஎங்கும் காணமுடியாது. கோனேரிராஜபுரம் வருத்தாசலம், திருமணச்சேரி, ஆடுதுறை, திருக்கோடிக்கா, ஆநாங்கூர், குத்தாலம், திருவக்கரை, திருச்சேலூர், நல்லூர்,கோவிந்த புத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள சிவாலயங்களைக் கட்டியவர் செம்பியன் மாதேவி. இவர் ஏராளமான செப்புச் சிலைகள் செய்து கோவில்களுக்கு அளித்துள்ளார்.செம்பியன் மாதேவியார் பாணி எனச் சிறபவல்லுநர்கள் கூறும் அளவுக்கு இவரது காலத்தில் செய்யப்பட்ட செப்புச் சிலைகள் சோழர்கள் ஆண்ட பகுதிகளில் காணப்படுகின்றன. (து)

# வை.கோ மீதான வழக்கை
# வாபஸ் பெற அறிவுறுத்தல்

(சென்னை)

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ உள்ளிட்ட 9 பேர் மீதான பொடா வழக்கைத் திரும் பப் பெறுவது குறித்து பரிசீலிக்கும் படி அரசு வழக்கறிஞருக்கு தமிழக அரசு அறிவுறுத்திள்ளது.

இதற்கான தகவல் தலைமைச் செயலரிடமிருந்து தனக்கு வந்துள்ளதாக மாநில சிறப்பு அதிகாரி உறுதி செய்தார்.

வைக்கோ உள்ளிட்டோர் மீது பொடா வழக்கு தொடுப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்று சஹாரியா தலைமையிலான பொடா மறு ஆய்வுக் குழு கடந்த எப்ரல் எட்டாம் திகதி தெரிவித்தது. இதையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை ஆராயப் பட்டுவருகிறது.

தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதாரித்து திருமங்கலத்தில் 2002 ஆண்டு யூன் 29 திகதிய கூட்டத்தில் வைகோ பேசியதாக தமிழக அரசு பொடா வழக்கைப் போட்டது. வைகோ வன்முறைச் செயலில் எந்தக் காலத்திலும் ஈடுபட வில்லை என்று அந்தக் குழு வின் அறிக்கை தெரிவிக்கிறது. எனவே இது தொடர்பாக அரசு வழக்கறிஞருக்கு உரிய உத்தரவை பிறப்பிக்கலாம் என்றும் ஆய்வுக் குழு யோசனை கூறியுள்ளது.வைகோ உள்ளிட்டோர் மீதான பொடா வழக்கை பூந்த மல்லியில் உள்ள சிறப்பு நீதிமன்றம் விசாரிப்பதற்கு உச்ச நீதிமன்றம் கடந்த வெள்ளிக் கிழமை தடை விதித்தது தெரிந்ததே. (து)



தி.மு.க.-காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரம் செய்வதற்காக சென்னை வந்த காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை,தி.மு.க. தலைவர் கருணாநிதி பூங்கொத்துக் கொடுத்துவரவேற்கிறார்

**இந்தியச் செய்திகள்**

# எலி தந்த கிலியால்
# விமானம் தரையிறக்கம்

சென்னை விமான நிலையத்தில் இருந்து டுபாய்க்கு கடந்த சனிக்கிழமைக்கு புறப்பட்ட விமானத்தில் எலி இருந்தது கண்டறியப்பட்டதால் அந்த விமானம் உடனடியாகத் தரையிறக்கப்பட்டது.

சென்னை விமானநிலையத்தில் இருந்து சவுதிஅரோபிய ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான ஒரு விமானம் டுபாய்க்கு 172 பயணிகளுடன் புறப்பட்டது.

விமானம்புறப்பட்ட சிது நேரத்தில் ஓர் எலி ஊடுவிருவியுள்ளதை ஒரு பயணி கண்டறிந்தார். இதனால் அச்சமுற்ற அவர் விமான ஓட்டியின் அறைக்குத் தகவல் தெரிவிக்க எச்சரிக்கை மணியை ஒலிக்கச்செய்தார்.

இதையடுத்து விமானம் உடனடியாகச் சென்னை விமானநிலையத்தில் தரையிறக்கப்பட்டது. மாற்று ஏற்பாடாக இலங்கையில் இருந்து வரவழைக்கப்பட்ட தனி விமானத்தில் எலியின் பயமின்றி பயணிகள் டுபாய்க்குப் பறந்தனர். (து)



சென்னை அண்ணாசாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் அகில இந்திய ,கைத்தறித் துணிகள் மற்றும் சேலைகள் கண்காட்சி கடந்த வியாழக்கிழமை தொடங்கியது. இந்தக் கண்காட்சி வரும் 22ஆம் திகதி வரை நடபெறும்

# தேர்தல் பாதுகாப்பில் 1இலட்சம் பொலிஸார்
# கள்ள வோட்டுப் போட்டால் கடும் நடவடிக்கை

(சென்னை)

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் அமைதியாகவும் நேர்மையாகவும் நடைபெறும் வகையில் மாநிலம் முழுவதும் பாதுகாப்புப் பணியில் 1இலட்சம் பொலிஸார் அமர்த்தப்பட்டுள்ளனர்.

கள்ள வோட்டுப் போடமுயன்றாலோ, வன்முறையில் ஈடுபட்டாலோ, ஆள்மாறாட்டம் செய்தாலோ கடும் நடவடிக்கை எடுககப்படும் என காவல்துறை எச்சரித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை முதல் இன்று திங்கட்கிழமை மாலை வரை 3நாட்களுக்கு மதுபானக் கடைகள்ள மூட அரசு உத்தரவிட்டுள்ளது.

புதுவை, தமிழகத்தல் மொத்தம் 40மக்களவைத் தொகுகள் உள்ளன. இவற்றில் 25 தொகுதிகள் பதற்றம் நிறைந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளன. இதில் சென்னையில் உள்ள 3தொகுதிகள் உள்ளிட்ட 13தொகுதிகள் அதிக பதற்றம் நிறைந்தவையாக அடையாளம் காணப்பட்டு கூடுதல பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

தேர்தல் பாதுகாப்புக்காக மத்திய பாதுகாப்புப் பொலிஸ்படை, மத்திய தொழில் பாதுகாப்புப் படை, சிறப்புப் பாதுகாப்புக் குழு, தமிழ் நாடு சிறப்பு பாதுகாப்புப் படை, முன்னாள் இராணுவத்தினர், ஓய்வு பெற்ற காவ்துறையினர் உள்ளிட்டோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

சென்னை,கடலூர்,கோவை ,மதுரை, பெரிய குளம்,புதுவை, நெல்லை, செங்கல்பட்டு,வேலூர் உள்ளிட்ட தொகுதிகளில் துணை இராணுவத் தினர் கூடுதல் பாதுகாப்பில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

செனனை நகரில் மட்டும் 14ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் நியமிக்கப்பட்டுள் ளனர்.இவர்களுடன் துணை இராணு வத்தைச் சேர்ந்த2,000பேர் சென்னையில் உள்ள 3 தொகுதிகளில் முக்கிய இடங்களல் கூடுதலான பாதுகாப்பில் அமர்த்தப்பட்டுள்ளனர். (து)

# ஜப்பானியப் பிரதமரின் ஆலோசகா இராஜினாமா

(ரோக்கியோ)

ஜப்பானியப் பிரதமர் கொயு சூமியின் வலதுகரமாக விளங்



கிவரும் அவரது அமைச்சரவையின் தலைமைச் செயலருமான யசூவோ ஃபுக்கூடா தனது பதவியைக் கடந்த வெள்ளிக்கிழமை இராஜினாமாச் செய்தார்.

வாக்களிக்கப்பட்ட இளைப்பாற்றிச் சம்பளக் கொடுப்பனவுகளை அரசாங்கம் கொடுக்க முடியாமல் இருப்பதைக் காரணம் காட்டி அவர் தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார். உடனடியாகவே பிரதமர் அவரது இராஜினாமாவை ஏற்றுக் கொண்ட போதும் அவர் எப்பொழுது பதவி விலகுவார் என்பது பற்றி எதுவும் தெரிவிக்கபபடவில்லை.

ஜப்பானில் அதிககாலம் அமைச்சரவைச் செயலராகப் பதவி வகித்தவா எனும் பெருமையைப் பெற்ற யசூவே நான்கு ஆண்டுகள் இப்பதவியை வகித்தார்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் டக்கியோவின் புதல்வரான இவர் தற்போதைய பிரதமருடன் வைத்திருந்த நெருங்கிய தொடர்பு காரணமாக "நிழல் வெளிநாட்டு அமைச்சா" எனும் பட்டப் பெயரையும் ஈட்டியிருந்தார். அமெரிக்க அதிகாரிகள் இவருடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருநதமை குறிப்பிடத்தக்கது. (யே)

# ஈராக் கைதிகள் மீது சித்திரவதை அமெரிக்க ஜனாதிபதி சமாளிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க இராணுவத்தினரால் ஈராக்கியக் கைதிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை குறித்து உலக நாடுகளில் எழுந்து வரும் ஆத்திரத்தைத் தணிப்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ "அச் சம்பவம் ஒரு சிலர் விட்ட தவறுகளால் நேர்ந்தவை எனக் கூறியுள்ளார்.

பக்தாத்திற்கு அருகில் உள்ள சிறைச்சாலையொன்றில் ஈராக் கைதிகள் அமெரிக்கப் படையினரால் மிகவும் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்படுவதாகச் செய்திகள் வெளிவருவதையடுத்து நாடுகள் பல அமெரிக்காவைக் கண்டித்து வருவதுடன் இச்சம்பவம் குறித்து தமது அதிருப்தியையும் வெளியிட்டுள்ளன.

இந் நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ், ஈராக் கைதிகள் அமெரிக்கப் படையினரால் தற்போது துன்புறுத்தப்படவில்லை என்றும் முன்னர் நடந்த அச்சம்பவம் ஒரு சிலர் விட்ட தவறுகளால் நேர்ந்தவையென்றும் ஊடகம் ஒன்றின் மூலமாகக் கூறியுள்ளார்.

இதற்கிடையில் ,ஈராக் கைதிகள் மீதான அமெரிக்கப் படையினரின் துஷ்பிரயோகங்கள் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ரொனால்ட் ரம்ஸ பீல் மீது அதிக அழுத்தங்களைக் கொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக் கைதிகள் துன்புறுத்தப்படுவது குறித்து அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் ஏற்கனவே பகிரங்க மன்னிப்புக் கோரியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-60,10)



ரஷ்ய அதிபராக விளாடிமிர் புடின் மீண்டும் பதவியேற்றுக் கொண்டார். அவரது பதவியேற்பு விழா வியாழக்கிழமை செயின்ட் ஜார்ஜ் வளாகத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

WORLD NEWS

உலக தரிசனம்

# சார்ஸ் நோய் அபாயம் குறித்து சீன விஞ்ஞானிகள் எச்சரிக்கை

(சீனா)

சார்ஸ் நோயாளியோடு கைகுலுக்கினாலே அந்நோய் தொற்றிக்கொள்ளும் அபாயம் இருப்பதாக சீன விஞ்ஞானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சார்ஸ் நோய் தாக்கி இறந்த 4பேரின் உடல்களை அண்மையில் சீன இராணுவ மருத்துவப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகள் பரிசோதனை செய்தனர். இவ்வைத்திய பரிசோதனைகளின் இறுதியிலேயே இந்த உண்மை கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி பரிசோதனையின் போது, நோயாளிகளின் வயிறு, சிறுகுடல்,வியர்வைச் சுரப்பிகள்,ஈரல் மற்றும் மூளை போன்ற உறுப்புக்களில் சார்ஸ் நோயை உண்டாக்கும் வைரஸ் கிருமிகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

அத்துடன்,இந் நோயானது கழிவு நீர், உணவு மற்றும் வியர்வை போன்றவற்றாலும் பரவுமெனத் தெரிவித்துள்ள இவ் விஞ்ஞானிகள், இந்நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கவும், தம்மைப் பாதுகாக்கவும் முகமூடிகள் அணிவதுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளாது கையுறை, பயன்படுத்திய ஆடைகள் போன்றவற்றை உடனடியாக அழித்து விடுமாறும் கூறியுள்ளனர்.

மேலும், இந்நோயாளிகளின் உமிழ் நீரில் இருந்தும் சார்ஸ் நோய்க் கிருமிகள் சுற்றுச்சூழலல் பரவுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்குச் சீனாவில் இதுவரை இந்நோயத் தாக்கத்திற்கு உள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 10 பேர் நோய்த் தொற்றுக்கு இலக்காகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்கு சீன அரசு பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (ந-18)

# பங்களாதேஷில் வேலை நிறுத்தம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

பங்களாதேஷில் நேற்று ஆரம்பமான வேலைநிறுத்தத்தினால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

எதிர்க்கட்சி சிரேஷ்ட அரசியல்வாதி ஒருவர் கொலை செய்யப்பட்டதைக் கண்டித்தே இந்த வேலை நிறுத்தம் இடம் பெற்றுள்ளது. நாடு தழுவிய ரீதியில் இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது.

வர்த்தக ஸ்தாபனங்கள், பொதுப் போக்குவரத்து சேவைகள் என்பன இந்த வேலை நிறுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தலைநகர் டாக்காவிற்கு அருகில் தொங்கி என்ற இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரை நிகழ்த்திய அவ்ாமி லேக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான அஸினுல்லா மாஸ்ரர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி கொல்லப்பட்டிருந்தார். இதனையடுத்து கடந்த இரண்டு நாட்களாக தொங்கிப் பிரதேசத்தில் பேருந்துகளும்,புகையிரதங்களும அஸினுல்லாவின் ஆதரவாளர்களினால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-121)

### சீனாவில் கடும் சூறாவளி இருவர் பலி 85 பேர் காயம்

சீனாவில் வீசிய கடும் சூறாவளியினால் இருவர் உயிரிழந்திருப்பதுடன் 85பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களுள் 20 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அந்நாட்டு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துளளன.

சீனாவின் தென்பகுதி குவாங்டொம் மாகாணத்திலேயே சூறாவளி வீசியுள்ளது.

அந்தப்பகுதியில் உள்ள 500ற்கும் மேற்பட்ட வீடுகள் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் பிரதேசத்தில் பலர் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (121)

# அடைமழை காற்று காரணமாக நாரந்தனையில் வீடுகள் சேதம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்து வந்த அடைமழை மற்றும் மினிசூறாவளி காரணமாக ஊர்காவற்றுறை நாரந்தனைப் பிரதேசத்தில் போரூட் நிறுவனததால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளன.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்காக மேற்படி பகுதியில் போரூட் சர்வதேச தொண்டர் அமைப்பு 10 வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தது.


இந் நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு பெய்த அடைமழை மற்றும் மினிசூறாவளியினால் இவ் வீடுகளின் கூரைகள் சேதமாகியுள்ளதுடன வீடுகளின் சுவர்களும் இடிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் இவ் வீடுகளில் தங்கியிருந்த 10 குடும்பங்களும் இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் தங்கியுள்ளன. (ந-75)

### தபால்சேவை சீரில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கான தபாற் சேவைகள் சீரற்று இருப்பதால் பொது மக்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனா. (18)



அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் யாழ். அலுவலகத் தலைமை அதிகாரி கே.சுகிமுறாட்டா தமது நிறுவனத்தின் செயற்திட்டங்கள் குறித்து விளக்கமளிப்பதனையும் அருகில் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்துராசா இருப்பதனையும் படத்தில் காணலாம்.



85வது சுதேசிய திருநாள் விழாவையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் கீழ்ப்பிரிவில முதலிடம் பெற்ற யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி க. விதுஷகாவிற்கு திருமதி லலிதா சண்முகம் பரிசில் வழங்குகிறார். (படம்:சுண்டுக்குளி நிருபர்)

உடம்பாடு இல்லாதவர் வாழ்க்கை குடங்கருள்
பாம்போடு உடனுறைந் தற்று -குறள்

வலம்புரி

## குட்டையைக் குழப்ப தயாராகிவிட்ட ஜே.வி.பி.

ஜே.வி.பி., அரசில் இணைந்திருக்கும் வரை சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது முடியாத காரியமென உலக சமாதான ஒத்துழைப்பு நிறுவனத்தின் போசகர் கூறியது நிஜம் என்பது இப்போது உறுதியாகி விட்டது.

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கா நோர்வேக்கு அழைப்பு விடுத்தபோது மௌனமாக இருந்த ஜே.வி.பி. இப்போது மெல்ல மெல்ல தனது எதிர்ப்பைக் காட்டத் தொடங்கி யுள்ளது.

அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் சமாதான பேச்சுக்களில் நோர்வேயின் தலையீடு அத்துமீறிவிட்டதாக குற்றஞ் சாட்டியுள்ள ஜே.வி.பி. அது தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்து தனது ஆதங்கத்தை தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கையோடு சமாதான முயற்சியை தொடர்வதற்கு வசதியாக நோர்வேயை அழைத்திருந்தது.

நோர்வேக்கு விடுக்கப்பட்ட அழைப்பு புதிய அரசின் சமாதான முயற்சியில் ஓர் எதிர்பார்ப்பை-நம்பிக்கையை ஏற்படுத்துவதாகவும் இருந்தது. ஆனால், சமாதான முயற்சிகளின் ஆரம்ப கட்டங் களிலேயே அதனைக் குழப்பி யுத்தத்தை ஆரம்பிப் பதில் ஜே.வி.பி. முனைப்புடன் செயலாற்றத் தொடங்கியுள்ளது. இக் குழப்பத்தின் ஆரம்பக் கட்டமாக, ஜே.வி.பியினால் சமாதான பேச்சுத் தொடர்பாக விடுக்கப்பட்ட அறிக்கை அமைந் துள்ளது.

அதாவது, அரசுடன் பேச்சு நடத்தும் மறு தரப்பாக விடுதலைப் புலிகளை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை திட்ட வரைபில் இருந்து பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் அனுமதிக்க மாட்டோம் என ஜே.வி.பி. விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால சபைத் திட்ட வரைபென்பது எழுந்தமானமாக் முன்வைக் கப்பட்ட ஓர் திட்ட வரைபன்று. விடுதலைப் புலி களின பிரதிநிதிகளும், சர்வதேச சட்ட வல்லுநர்களும் கூடி ஆராய்ந்து தயாரித்த திட்ட வரைபே அது வாகும்.

அத்துடன் விடுதலைப் புலிகளால் முதன் முதலாக எழுத்துமூலம் முன்வைக்கப்பட்ட திட்ட வரையும் இதுவென்பது இங்கு நோக்குதற்குரியது.

சமாதான முயற்சிகளின் நம்பிக்கை கொண்டு யுத்தத்தை நிறுத்தி இலங்கையின் இறைமைக்குள் தீர்வைக் காணும் நோக்குடன் விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தை ஒரு புறத்தில் வைத்துவிட்டு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்.

தம்மால் தயாரிக்கப்பட்ட திட்ட வரைபில் இருந்து விலகி புதியதொரு வழியில் சமாதான பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு புலிகள் ஒருபோதும் தயாரில்லை.

இதனை விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோலிடம் மிகத் தெளிவாக-ஆணித்தரமாக கூறியுள்ளார்.

நிலைமை இவ்வாறாக இருக்கும் போது புலிகளின் திட்ட வரைபில் இருந்து சமாதான பேச்சுக்களை தொடர முடியாதென ஜே.வி.பி. கூறுவது சமாதான பேச்சு என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதற்கே ஒப்பானதாகும்.

எதுவாயினும் சமாதான முயற்சிகளை குழப்ப முற்படும் ஜே.வி.பி. சமாதானம் குழம்பி மீண்டும் ஓர் யுத்தம் தொடருமாக இருந்தால் அதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பை கொண்டிருக்கும் என்பதை அக்கட்சி மறந்துவிடலாகாது.

ஏனெனில் விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசுகள் சமாதான பேச்சுக்களை நடத்த முன் வந்தமை விடுதலைப் புலிகள் நடத்திய அகிம்சை. போராட்டங்களால் அல்ல.

விடுதலைப் புலிகளின் அதி உன்னதமான ஆயுதப் போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாமலேயே புலிகளுடன் பேசுவதே ஒரே வழி என்ற முடிவுக்கு சிங்கள அரசுகள் முன்வந்தன. இந்த விடயத்தை கடந்த இரண்டுவருடகால யுத்த நிறுத்தம் மறதியடையச் செய்திருந்தாலும், விடுதலைப் புலிகள் மீண்டும் தாக்குதலை நடத்தினால் என்னவாகுமென்பதை ஜே.வி.பி. ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

# பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாக சபை யோசனைகள்!

(கொழும்பு)

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராகவுள்ளார். ஆனால் இடைக்கால நிர்வாக இறுதித்தீர்வினை வேறுபிரித்து அறிய முடியாத ஒரு அம்சமாகவே இருக்கும் என ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

மேலும், கடந்த 2000ஆம் ஆண்டு ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்புச் சட்டமூலத்தில் அவர் தனது நிலைப்பாட்டை தெளிவாகக் கூறியுள்ளார். இதன்படி இடைக்கால நிர்வாகம், பேச்சுக்களின் இறுதிக்கட்ட தீர்வின் ஒரு அம்சமாக அமுல்படுத்தப்படும். இந் நிலைப்பாட்டில் எந்வொரு மாற்றமும் கிடையாது.

கடநத வாரம் புலிகள் இடைக்கால நிர்வாகசபை யோசனை களை முன்வைத்தவுடனேயே வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு செய்தியாளர் மாநாட்டில் வைத்து இதில் சில முதன்மையான விடயங்கள் அடங்கியிருப்பதாகத் தெரிவித்திருந்தார். எனினும், பிரேரிக்கப்பட்டவை அனைத்தும் முழுமையாக அமுல்படுத்தப்படல் வேண்டும் என்பது அர்த்தமல்ல என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

அத்துடன், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள பேச்சுக்களுக்கு ஆரம்பமாகக் கொள்ளப்படும். ஆனால சில விடயங்களில் சமரசம் காணப்படல் வேண்டும். பேச்சுக்களின் அடிப்படை இடைக்கால நிர்வாக கட்டமைப்பு யோசனைகளே எனக் கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

ஜே.வி.பியின் எதிர்ப்பு காரணமாக இடைக்கால நிர்வாக சபை குறித்த பிரேரணைகள் நிராகரிக்கப்படலாம் என வெளியாகிய அறிககைகளை மேற்படி வட்டாரங்கள் நிராகரித்துள்ளன. (6)

## சாட்டிக் கடற்கரையில் இளைஞர் குழு அட்டகாசம்

(மண்கும்பான்)

மண்கும்பான் சாட்டிக் கடற்கரையில் இளைஞர் குழுக்களின் தொல்லை அதிகரித்து வருகின்றது.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பொழுது போக்குவதற்காக வந்து குவியும் இளைஞர் குழுக்கள் மதுவை அருந்திவிட்டு போதை தலைக்கேறிய நிலையில் அவ்விடங்களில் அலைந்து திரிந்து அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் இச் செயற்பாடுகளால் இங்கு வரும் உல்லாசப் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களையும் எதிர் கொண்டு வருகின்றனர். (ந-56)

## தமிழ்விழா

(கொழும்புத்துறை)

தவத்திரு தனிநாயகம் தமிழ் மன்றத்தின் வருடாந்தத் தமிழவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

கொழும்புத்துறை சவேரியார் குருத்துவக் கல்லூரியின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இவ்விழாவில் தமிழர்களின் பாரம்பரியக் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ந-51)

# ஏழைமக்களின் சமுர்த்தி நிதி எஸ்.பி.திஸநாயக்கவால் மோசடி

## குற்றஞ்சாட்டுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

நாட்டில் சமுர்த்தி அனுகூலங்களையும், உதவிகளையும் பெறுவோருக்கு இதுவரை வழங்கப்படாதிருந்த கொடுப்பனவுகள் அனைத்தையும் உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை சமுர்த்தி அமைச்சின் செயற்பாடுகள் குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினைகளை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமுர்த்தி அமைச்சருக்கும் சகல அதிகாரிகளுக்கும் விடுத்துள்ள பணிப்புரைக்கு அமைய இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவிருக்கின்றன.

600ரூபா,ஆயிரம் ரூபா, ஆயிரத்து 200ரூபா ஆகிய கொடுப்பனவுகளில் குறைக்கப்பட்ட 140ரூபா பணம் சமுர்த்தி உதவிகள் பெறும் அனைவருக்கும் மீண்டும முழுமையாக வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், சமுர்த்தி அனுகூலம் பெறும் அனைவருக்கும் இரண்டு மாதங்களுக்குள அவர்களது சேமிப்புக் கணக்குகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி உத்தர விட்டுள்ளார்.

இதுவரை துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சமுர்த்திப் பணத்தையும, பல்வேறு தனியார் வங்கிகளில் முதலீடு செய்யப்பட்ட பணததையும் உடனடியாக சமுர்த்தி நலன் பெறுவோருக்கு வழங்கும் வகையில், இந்தப்பணம் முழுவதும் வட்டியுடன் சமுர்த்தி நலன் பெறுவோரின் கணக்குகளில் வைப்புச் செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

நாடடில் வாழும் வறிய மக்களுக்குச் சேரவேண்டிய கோடிக் கணககான பணம் மோசடி செய்யப்பட்டமை குறித்தும், எஸ்.பி. திஸநாயக்க சமுர்த்தி அமைச்சுக்குப் பொறுப்பாகவிருந்த போது சமுர்த்தி நிதி மோசடி செய்யப்பட்டமை குறித்தும் ஜனாதிபதி கவலை தெரிவித்தார்.

இந்த மோசடிகளுக்குப் பொறுப்பான அனைவருக்கும் எதிராக உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், குற்றவாளியாகக் காணப்படுவோருக்கு கடுந்தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் ஆட்சியினால் சமுர்த்தி அமைச்சுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்ட கோடிக் கணக்கான ரூபாய் பணம் சமுர்த்தி அமைச்சினால் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்றும், தற்போதைய சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி குற்றஞ்சாட்டியுள்ளார்.

1995ஆம் ஆண்டில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம ஆரம்பித்து வைத்த நிவாரணக் கொடுப்பனவுகள் மூலம் 18 இலட்சம் குடும்பங்களுக்கு வருடாந்தம் வழஙகுவதற்கென ஆயிரத்து 200 கோடி ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருநதது. ஆனால் முன்னாள் அமைச்சரும், அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளும் இந்தப் பணத்தை துஷ்பிரயோகம செய்திருக்கிறார்கள் என்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ந-121)

தினசரி தியானம்

விவேகச் சிந்தனைகள்

நீங்கள் எல்லையற்ற ஆன்மா என்பதை உணருங்கள். இதுதான் செயல் முறை மதம். வேறு எதுவும் செயல்முறைக்கு ஒத்துவராதவை. ஏனெனில் அவை எல்லாம் மறைந்து விடும். ஆன்மா என்றென்றும் இருக்கும்.

சுவாமி விவேகானந்தர்.

## பாடவிதானத்தில் மீண்டும் வரலாறு, இலக்கியம்

(கொழும்பு)

வரலாறு, இலக்கியம் ஆகிய பாடங்களை மீண்டும் பாடசாலை பாடவிதானத்தில் சேர்த்துக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நிந்தெனியாவில் உள்ள மக்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய போதே பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் நலிவுற்றிருக்கும் கலாசார விழுமியங்களைப் பேணும் பொருட்டே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வி அமைச்சைத் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளார்.

வரலாறு, இல்க்கியம் ஆகிய பாடங்களின் ஊடாக கலாசார விழுமியங்களைக் கட்டியெழுப்பலாம் என்ற நம்பிக்கை ஜனாதிபதிக்கு இருப்பதால் மீண்டும் அவ்விரு பாடங்களையும பாடசாலை பாடவிதானத்தில் சேர்த்துக் கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

இதேவேளை, நாட்டின் சகல விகாரைகளுக்கும் மின் அஞ்சல் வசதிகளுடனான கணனிகளை வழங்கவும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்றார். (ந-61,10)

## நீதியான சமுதாயத்தை உருவாக்க விசேட திட்டம் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

நீதியுடனான சமுதாயம் ஒன்றை கட்டியெழுப்புவதற்குரிய விசேட திட்டம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று ஆரம்பித்து வைத்துள்ளார்.

நாட்டில் சமத்துவம் மிக்க மக்கள் சமூகத்தை உருவாக்குவதையும் வறிய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டே இத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கென ஜனாதிபதி நிதியத்தில் இருந்து கணிசமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்ட அமுலாக்கலில் பிரதேச வாரியாக இருக்கும் வழிபாட்டுத்தலங்களும், பொது நிறுவனங்களும் முக்கிய பங்கை வகிக்கும்.

சமுதாயத்தில் கல்வி, கலை, கலாசாரம் என்பவற்றைப் பேணுவதுடன் இளம் சமுதாயத்தினருக்குரிய தொழில் பயிற்சிகள மற்றும் தொழில் வாய்ப்புகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுககும் திட்டங்களும் இதன் கீழ் நடைமுறைக்கு வரும். (ந-4.60)



மன்னார் பள்ளிமுனை சென். லூசியஸ் விளையாட்டுக் கழகத்தினரை கௌரவிக்கும் முகமாக யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மங்கள வாத்தியங்கள் முழங்க வீரர்கள் அழைத்து வரப்படுவதையும் தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஏற்றுவதையும், சென். லூசியஸ் அணித் தலைவர் பிரபாகரன் ரோஜ் தாம் பெற்றுக்கொண்ட வெற்றிக் கிண்ணத்தை பாப்பாவிடம் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : க.பவன்)

## கதிர்காமர் அமெரிக்கா விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் இன்று அமெரிக்காவுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். இவ் விஜயத்தின் போது அமெரிக்க ராஜாங்க அமைச்சின் செயலாளர் கொலின் பவல், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொந்தலீஸா ரைஸா ஆகியோரை சந்தித்து உரையாடவுள்ளார்.

இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள், அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகள் உட்பட பல விடயங்கள் குறித்து இச்சந்திப்பில் ஆராயப்படும்.

(ச,61-10-121)

## கலைஞர்...

கரையில் நேற்றைய கூட்டம் அமைந்திருந்தது.

லட்சோப லட்சம் மக்கள் கடற்கரை மண் தெரியாதவாறு நிறைந்திருந்த மக்கள் சமுத்திரத்தின் மத்தியில் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, திடீரென இனந்தெரியாத கும்பலொன்று விளைவித்த குழப்பத்தினால் அங்கு பெரும் களேபரம் வெடித்தது.

இதனை அடுத்து ஜன சமுத்திரத்தின் மத்தியில் இருந்து, மக்களின் எதிர்ப்பையும் மீறிப் பொலிஸார் கலைஞர் கருணாநிதியைத் தாறுமாறாகத் தாக்கியதுடன் அவரது வேட்டி அவிழ அவிழ அவரைத் தரதரவென இழுத்துச் சென்று குண்டுக்கட்டாகத் தூக்கி ஜீப்பில் போட்டனர். அத்துடன் அவரது மகன் ஸ்ராலின், வை.கோ ஆகியோரும் தாக்கப்பட்டு ஜீப்பில் தூக்கிவீசப்பட்டனர்.

தமிழ் நாடு சட்டக்கல்லூரி மாணவர்கள் கலைஞரின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தடுத்த போது பொலிஸார் அவர்களைக் குண்டாந்தடியால் மூர்க்கத்தனமாகத் தாக்கியுள்ளனர். கலைஞரின் கைது தமிழநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருப்பதால் அங்கு பெரும் வன்முறையும் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (இ)

## புலிகளின் திட்ட...

வேளை, தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினையோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்பதே எமது கொள்கையாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை மறுதரப்பாக ஏற்று அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதினால் அவர்களே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று அர்த்தமாகி விடமாட்டாது என்றும் இலங்கையில் யுத்தமற்ற ஒரு சூழலை முன்னெடுத்துச் செல்வதே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் எதிர்பார்ப்பாக இருப்பதுடன் நாட்டின் இறைமை தேசிய பாதுகாப்பு தனித்துவம் ஆகியவற்றை எவருக்கும் விட்டுக் கொடுப்பதற்கு தயாரில்லையென்றும் ஜே.வி.பி தனதுஅறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

(ம-121)

## தமிழ்.

ரஸின் அரசியல்செயற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக அரசியல் உயர் பீடமும் பாராளுமன்ற உறுப்பினர் குழுவும் இன்று சந்திக்கவுள்ளதாகத் தெரிவிககப்படுகின்றது. (ச)

## போராளி சாவு

(கிளிநொச்சி)

சுகவீனம் காரணமாக புலிப் போராளி ஒருவர் நேற்று சாவடைந்துள்ளார்.

கண்டாவளை புளியம் பொக்கணையைச் சேர்ந்த வீரவேங்கை தேன்மலர் (மகாலிங்கம பிரதீபா) என்ற போராளியே சாவடைநதவராவார். (ச)

## நோர்வே..

மற்றும் பேச்சுக்கள் நடைபெறும் இடங்கள் தொடர்பான விடயங்கள் இப் பேச்சுக்களில முக்கியமாக ஆராயப்படவுள்ளது.

சமாதான முயற்சிகளில் இது வரை ஏற்பட்டுள்ள பின்னடைவுகளை நீக்கும் வகையிலான நடவடிக்கைகளை அமைசசர் பீற்றர்சன் மேற்கொள்வாரென நம்பப்படுகின்றது.

இதேவேளை, நாளை வன்னி செல்லும் அமைச்சர் அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மற்றும் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஆகியோரையும் சந்தித்துச் சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடுவதுடன், புலிகளின் உறுதியான முடிபையும் வெளியிடுவாரென எதிர் பார்க்கப்படுகின்றது.

(இ-121)

## மட்டக்களப்பு..

வினருடன் தொடர்புடையவராக இருக்கலாமெனவும் பொலிஸ் அதிகாரியான எச.ஏ. லங்கஸ்ரீ தெரிவத்துளளார். கொல்லப்பட்டவரின் சடலம் திருகோணமலை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச)

## மட்டு. கொலைகள் குறித்து கண்காணிப்புக்குழு ஆராய்வு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டு வருவது தொடர்பாக யுத்தநிறுத்த கண்காணிப்புககுழு விசாரணைகளை மேறகொண்டு வருவதாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகா ரொட்டி தெரிவிததுள்ளார்.

மட்டக்களப்பு தன்னாமுனை பகுதியில் அண்மையில் இரண்டு விடுதலைப் புலி உறுப்பினர்கள் இனநதெரியாத துப்பாக்கி நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உள்ளிட்ட கொலைச் சம்பவங்கள் குறித்து ஆராயந்து நடவடிக்கை எடுக்குமாறு தமிழழ வடுதலைப் புலிகள் கடிதம் மூலம் கோரியதை அடுத்து யுதத நிறுத்த கண்காணிப்புக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை மட்டக்களப்பில் இராணுவ புலனாய்வுப பிரிவைச் சேர்ந்த ஒருவரும், திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் ஒருவரும் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகவும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகங்கள் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## கொழும்பில்....

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி ரஞ்சினி பாலகுமாரன் (வயது40), வான் சாரதியான சாவகச்சேரியைச் சேர்ந்த பாலேந்திரா (வயது30) என்பவருமே பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர். இதன் போது வானில் பயணம் செய்த ஆசிரியையின் கணவர் பாலகுமரன் (வயது42) அவரது சகோதரன் பாலமுகுந்தன் (வயது35) உறவினர் சிவமலர் (வயது35) ஆகிய மூவருமே காய மடைந்தவர்களாவர்.

இவர்களில் பாலகுமரன் சிகிசசையின் பின்னர் கொழும்பில் உளள உறவினர் வீட்டில் தங்கியுள்ளார். ஏனைய இருவரும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் பற்றித் தெரியவருவதாவது; வெளிநாட்டில் இருந்துவரும் உறவினரை விமானநிலையம் சென்று அழைத்து வருவதற்காக காலை கட்டுநாயக்கா விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருக்கும் போது அதே வீதியால் வந்து கொண்டிருந்த பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து ஹயஸ் வானுடன் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரியவருகின்றது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

விபத்தில் இறந்தவர்களின் சடலம் மரணவிசாரணைக்காக கொழும்பு பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுளளது.

இதேவேளை இன்று மாலை சடலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## திருமலை..

பொறுப்பாளராகப் புதிதாகப் பொறுப்பேற்ற எழிலன், முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.திலக், பொலிஸ் அத்தியட்சகர் தயா சமரவீரா, இராணுவப் பிரிகேடியர் சகீர், கடற்படைக்கட்டளை அதிகாரி திலகரட்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இச் சந்திப்பானது புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரை அறிமுகப்படுத்துமுகமாகவும திருகோணமலை மாவட்டததின் தற்போதைய நிலைபரம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காகவுமே மேற்கொள்ளப்பட்டதாகத் திருகோணமலை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்தார். (ம)

## புலிகளின்...

தையும் ஆட்சேபத்தையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவூடாக அரசுக்குத் தெரிவித்தனர்.

இதனையடுத்து படைத்தரப்பின் நிலைப்பாட்டைத்தெளிவுபடுத்தும் நோக்கிலும், குற்றச்சாட்டுக்களுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையிலும் கருத்துத் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் சுமேத மேலும் கூறுகையில்;

இராணுவத்தினர் தற்போது நிலவிவரும் யுத்த நிறுத்தத்தையும புரிந்துணர்வு உடன்படிக்கையையும் மதித்து நடக்கவே விரும புகின்றனர். இதனைக் குழபப வேண்டிய தேவை இராணுவத்தினருக்குக் கிடையாது என்றும் தெரிவித்துள்ளார். (இ-121)






இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.